Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 285 பிலவ வருடம், ஆடி மாதம் 08ஆம் திகதி சனிக்கிழமை
(24.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்ஹஜ் பிறை - 13, 0115886187 - பக்கங்கள் 08


விலை ரூ.30

## நக்கல் நமசிவாயம்




## டெல்ட்டா திரிபின் வீரியம் ஆயிரம் மடங்கு அதிகம்

வெளியானது புதிய தகவல்




02»

## போர்ட்சிட்டி தலைவருடன் ரணில் இரகசிய சந்திப்பு



கொழும்பு துறைமுக நகரான போர்ட்சிட்டியின் தலைவரான ஹூலியாங் ஜியாங்குடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பில் முன்னாள் எம்.பி.ருவன் விஜேவர்தனவும் கலந்துகொண்டார்.

போர்ட்சிட்டி தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைத்த ஐக்கிய தேசியக் கட்சி, அதன் தலைமை நிர்வாகியுடன் இவ்வாறு இரகசிய சந்திப்பொன்றை நடத்தியிருப்பது குறித்து அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## 'டெல்ட்டா'வை விட வீரியம் மிக்க மற்றொரு வைரஸ் உருவாகலாம்!

உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

08»

### - கொரோனா வைரஸ் -



# இரு வாரங்களில் 500 பேர் மரணம்!

## கொரோனா மூன்றாவது அலையில் இதுவரை 3,350 உயிரிழப்புகள்

•யோ.தர்மராஜ்

நாட்டில் கொவிட் தொற்று பரவல் தீவிரமடைந்துள்ளதால் கடந்த இரு வாரங்களில் மாத்திரம் 550இற்கும் மேற்பட்ட கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, மூன்றாவது கொரோனா அலையில் இதுவரை 3 ஆயிரத்து 350 மரணங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த 22ஆம் திகதியுடன் முடிவடைந்த இரு வாரங்களில் மாத்திரம் நாட்டில் 568 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ள....

02»

## சிறுவர்களை வேலைக்கமர்த்தும் வீடுகளை தேடி விசாரணைகள்

### சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிப்பு

•யோ.தர்மராஜ்

கொழும்பிலுள்ள சில வசதிபடைந்த வீடுகளில் வயது குறைந்த சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறு சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் வீடுகளை எதிர்வரும் சில நாட்களில் சோதனையிட நடவடிக்கை எடுக்கப்படும் என சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் முதித்த விதானபத்திரண தெரிவித்தார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பிலுள்ள சில வசதிபடைத்த வீடுகளில் வயது குறைந்த சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

02»

## ஜே.பி. பதவிக்கான விண்ணப்பத்தை தமிழில் பூர்த்திசெய்யக் கூடாதாம்!

### நீதியமைச்சு புதுவித அறிவிப்பு



சமாதான நீதவான் பதவிக்கான விண்ணப்பப்படிவத்தை தமிழ் மொழியில் பூர்த்திசெய்வதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, விண்ணப்பங்களை பூர்த்திசெய்யும்போது பின்பற்றவேண்டிய அறிவுறுத்தல் வழிகாட்டியில் சிங்களம் அல்லது ஆங்கில மொழிகளில் நிரப்புமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

02»

## டெல்ட்டா தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை 68 ஆக உயர்வு

•யோ.தர்மராஜ்

நாட்டில் டெல்ட்டா தொற்றுக்குள்ளான மேலும் 30 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கையில் டெல்ட்டா திரிபு தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 68 ஆக அதிகரித்துள்ளது.

சுகாதாரப் பிரிவின் புதிய தகவலுக்கமைய கோட்டை, கொலன்னாவை, அங்கொடை, நவகமுவ, மாபாகே, கட்டுநாயக்க, நீர்கொழும்பு, இரத்மலானை, பிலியந்தலை, பேருவளை, காலி, மாத்தறை, தம்புள்ளை, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் டெல்ட்டா திரிபுடன் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் நாட்டில் டெல்ட்டா தொற்றுக்குள்ளான 38பேர் அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 17 பிக்குமாருக்கு கொரோனா

ஹபராதுவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட தல்பே புலனிதலாராம விகாரையைச் சேர்ந்த 17 பிக்குமாருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஹபராதுவ சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் பிரமோத சிறிவர்தன தெரிவித்தார்.

குறித்த விகாரையின் விகாராதிபதிக்கு முதலில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானதாகவும், பின்னர் அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர். பரிசோதனையில் 16 பிக்குமாருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதியானதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான அனைத்து பிக்குமார்களும் சிகிச்சைக்காக பூஸா கொரோனா சிகிச்சை மையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் ஹபராதுவ சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

## வெளிநாட்டிலுள்ள கறுப்புப்பணத்தை கொண்டுவருவது சட்டமாக்கப்படுகிறது

### மாளிகைக்காட்டில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



•பாறுக் ஷிஹான்

நாட்டில் பல களவுகள் இடம்பெற்று கொண்டுதான் இருக்கின்றன. வெளிநாட்டிலுள்ள கறுப்புப்பணத்தை நாட்டுக்குள் கொண்டுவருவது சட்டமாக்கப் படுகின்றது. புதிய நிதியமைச்சர் இதனை மேற்கொள்கின்றார் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

02»

## பணிப்பெண்ணொருவர் மீது துஷ்பிரயோகம்; ரிஷாட்டின் மைத்துனர் பொலிஸாரால் கைது

•யோ.தர்மராஜ்

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் கடந்த 2015 - 2019 வரை பணிப்பெண்ணாகவிருந்த யுவதியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் ரிஷாட் பதியுதீனின் மனைவியின் சகோதரர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகம சிறுமி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைய முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணிப்பெண்ணாக பணிபுரிந்த நிலையில் உயிரிழந்த சிறுமி தொடர்பில் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், விசாரணைக்கான விசேட பொலிஸ் குழுக்களால் இதுவரை 20 பேரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

02»

மாணவர்களுக்கான 'ஜுனியர் தமிழன்' சஞ்சிகையை நாளைமுதல் பத்திரிகை முகவர்களிடம் பெறலாம். பிரதிகளுக்கு முந்துங்கள்...

## டயகம சிறுமி உயிரிழப்பு தொடர்பில் ரிஷாட்டின் மனைவி, தரகர் உள்ளிட்ட மூவர் கைது!



வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்ட 16 வயது மலையக சிறுமி உயிரிழந்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் மனைவி, தரகர் உள்ளிட்ட மூவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் மனைவியின் தந்தையும் சிறுமியை வேலைக்கு அமர்த்திய தரகரும் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொரளை பொலிஸாருக்கு மேலதிகமாக இரண்டு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுக்கின்றனர்.

இதற்கமைய, கொழும்பு தெற்கு சிறுவர் மற்றும் மகளிர் பணியக அதிகாரிகள் குழுவும் கொழும்பு தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவும் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் கூறினார்.

02»

# வடமராட்சியில் கடலட்டை தொழிலுக்கான அனுமதி

## கடற்றொழில் அமைச்சர் தீர்மானம்

மக்களின் வாழ்வாதாரத்தை கருத்திற்கொண்டு வடமராட்சி கடல் பிரதேசத்தில் கடலட்டை தொழிலுக்கான அனுமதியை வழங்கியுள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்களின் நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய- தடைசெய்யப்பட்ட தொழில் முறைகள் அனைத்தும் கட்டுப்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

வடமராட்சி பிரதேச கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே குறித்த விடயங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சரின் யாழ். செயலகத்தில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த அமைச்சர்,

பிரதேச மக்களில் பெரும்பாலானவர்களின் கருத்தை கடற்றொழிலாளர் சங்கங்கள் பிரதி பலிக்கின்றன என்றவகையிலும், மக்களின் தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டும், கடற்றொழில்



திணைக்களத்தினால் வரையறுக்கப்படும் நிபந்தனைகளை பின்பற்றி கடலட்டை தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்குகின்றேன்.

மேலும், மக்களின் நலன்களின் அடிப்படையிலேயே என்னுடைய தீர்மானங்கள் அமையும். வெளிச்சம் பாய்ச்சுதல், குலை போட்டு பிடித்தல் போன்ற தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளை முற்றாக தடைசெய்வதற்கு கடற்றொழிலாளர் சங்கங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

மேலும், கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற படகுகள் பதிவுசெய்யப் படவேண்டும். 40 குதிரைவலுவிற்கு உட்பட்ட இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் - என்றார்.

அதேவேளை, நாரா எனப்படும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி நிறுவனத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளை தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இழுவை வலைப் படகுகளைப் பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கப்படடுள்ள நிலையில், இழுவை வலைப் படகுகளைப் பயன்படுத்தி கடலட்டை தொழிலில் ஈடுபடுகின்றவர்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு, கடற்றொழில் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட பிரதானிக்கு அமைச்சரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# திகட சக்ர அமைப்பின் இணையவழி பட்டிமன்றம்




திகட சக்ர எனும் இணையவழி முகநூல், வலையொளித்தள அமைப்பு நடத்தும் 49ஆவது கிணத்தடி நிகழ்வு இன்று சனிக்கிழமை இலங்கை நேரம் மாலை 6.30 மணிக்கு நேரலையாக இடம்பெறவுள்ளது.

திகட சக்ரவின் இணையவழி பட்டிமன்றத்தின் ஊடாக இதுவரை இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, மலேஷியா, சிங்கப்பூர் , பிரித்தானிய போன்ற பல நாடுகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் கலந்து சிறப்பித்துள்ளனர்.

இன்றைய பட்டிமன்றத்தின் நடுவராக பிரபல பேச்சாளார் கலைமாமணி சொல்வேந்தர் சுகிசிவம் கலந்துகொள்கின்றார். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான வேறுபாடு குறைந்து வருவது ஆரோக்கியமானது, இல்லை என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம் பெறவுள்ளது.

ந.விஜயசுந்தரம் (பிரதம ஆசிரியர் - வலம்புரி நாளிதழ்) ச.கேசவன்(விரிவுரையாளர்) , ப.பால கோபி( சிறுநீரக, சனனித்தொகுதி வைத்திய நிபுணர்), சட்டத்தரணி இ.எழில்மொழி, சட்டத்தரணி ஸ்ரீ சிவஸ்கந்தஸ்ரீ த.ஆரதி(சட்ட பீட மாணவி) ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். நிகழ்வை thigada chakra எனும் facebook, youtube தளங்களின் ஊடாக கண்டு களிக்கலாம்.



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பௌர்ணமி தின சிரி சதஹம் மார்க்க போதனை நிகழ்வை படங்களில் காணலாம்.

# தேசிய வைத்தியசாலைக்குள் பாம்பு நுழைந்ததால் பரபரப்பு





கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விபத்து சிகிச்சைப் பிரிவுக்குள் நேற்று நாகப்பாம்பு ஒன்று நுழைந்தமையால் தாதியர்கள், ஊழியர்கள் மற்றும் நோயாளர்கள் அதிர்ச்சியும் அச்சமும் அடைந்துள்ளனர்.


இந்நிலையில், வைத்தியசாலையின் பாதுகாப்பு ஊழியர்கள் எவரையும் பாம்பு தீண்ட முன் தீவிர முயற்சிகளுக்குப் பின் பாம்பை பாதுகாப்பாகப் பிடித்து ஒரு போத்தலில் அடைத்ததாக வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் தலைமை தாதி புஷ்பா ரம்யானி டி சொய்சா தெரிவித்தார்.

பாம்பு சுவாசிக்க எளிதாக போத்தலில் ஒரு துளையிட்டோம். அதன்பிறகு பாம்பைப் பெற்றுக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நாங்கள் அறிவித்தோம், ஆனால், யாரும் முன்வராத காரணத்தால் இறுதியில் எங்கள் நண்பர் ஒருவர், குறித்த நாகப்பாம்பைக் கொழும்பிலிருந்து காட்டுக்குப் பகுதிக்கு கொண்டுசெல்ல ஒப்புக்கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் பூனைகள் உள்ளிட்ட பல விலங்குகள் இதற்கு முன்னர் வந்திருந்தாலும், விபத்து சிகிச்சைப் பிரிவுக்குள் நாகப்பாம்பு தென்பட்டமை இதுவே முதன்முறை என அவர் தெரிவித் துள்ளார்.

அது எப்படி இங்கு வந்தது என்பது எமக்குத் தெரியாது எனவும் புஷ்பா ரம்யானி டி சொய்சா தெரிவித்துள்ளார்.

# 2021 ஒலிம்பிக் ஆரம்ப விழா கோலாகலமாக இடம்பெற்றது



2021 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் பிரமாண்ட ஆரம்ப நிகழ்வு நேற்று நடந்தது.

கொரோனா அச்சம் காரணமாக கடந்த ஆண்டு ஒத்திவைக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய விளையாட்டுப் போட்டியான ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி ஜப்பானின் டோக்கியோ நகரில் நேற்று ஆரம்பமானது.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் 3ஆவது முறையாக கடந்த ஆண்டு நடைபெறவிருந்தது. ஏற்பாடுகள் எல்லாம் முடிந்த நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்று பிரச்சினை எழுந்ததையடுத்து போட்டி இந்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஜப்பானில் இப்போதும் கொரோனா பரவல் அச்சுறுத்தல் நிலவுவதால் அங்கு ஒலிம்பிக்கை நடத்த கடும் எதிர்ப்பு, போராட்டங்கள் நடந்தன. எனினும், இந்த ஆண்டு போட்டியை நடத்துவதில் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியும், ஜப்பான் அரசும் உறுதியாக இருந்தன..

அதற்கு வசதியாக நாடு முழுவதும் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அதனால் எந்த பிரச்சினையுமின்றி ஒலிம்பிக் போட்டி நேற்று ஆரம்பமானது.

போட்டிகள் அனைத்தும் பூட்டிய அரங்கில் நடக்கும். உதைபந்து, ஹொக்கி, டென்னிஸ், தடகளம் உட்பட குழு, தனிநபர் என 46 வகையான விளையாட்டுப்போட்டிகள் நடைபெறவுள்ளன. மொத்தம் 11,683 வீரர்கள் பங்கேற்கின்றனர். இவர்களைத் தவிர, பயிற்சியாளர்கள், அணி மேலாளர்கள், உதவியாளர்கள், மருத்துவர்கள், முடநீக்கியல் நிபுணர்கள் என 205 நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் இப்போது ஜப்பானில் முகாமிட்டுள்ளனர்.

## டெல்ட்டா திரிபின்..

சாதாரண கொரோனா வைரஸின் செறிவைக் காட்டிலும், டெல்ட்டா திரிபின் வீரியம் 1,000 மடங்கு அதிகமாக இருப்பதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

சாதாரண கொரோனா வைரஸுடன் அடையாளம் காணப்படுகின்ற தொற்றாளர்களது வைரஸ் செறிவைக் காட்டிலும், டெல்ட்டாவுடன் அடையாளம் காணப்படுகின்றவர்களின் வைரஸ் வீரியம் 1,000 மடங்கு அதிகமாக உள்ளது.

இதனால் நோய் பரவல் வேகமும், பாதிப்பு வீதமும் மிக அதிகமாக இருக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## கொரோனா வைரஸ்..

சுகாதார தரப்பு, உயிரிழந்தவர்களில் 327 பேர் ஆண்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, கடந்த இருவாரங்களில் 241 பெண்கள் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், இந்த மரணங்களில் 30 வயதிற்கும் குறைந்த மரணங்கள் 5 பதிவாகியுள்ளதுடன், 30 – 59 வயதிற்கிடைப்பட்ட 139 மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, குறிப்பிட்ட இரு வாரங்களில் 60 வயதிற்கு மேற்பட்ட 424 மரணங்கள் பதிவாகியுள்ளன.

அதற்கமைய, 60 வயதிற்கு மேற்பட்டவர்களே கொரோனா தொற்றில் அதிகம் பாதிக்கப்படுவதோடு, மரணங்களையும் எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றினால் இதுவரை நாட்டில் 3 ஆயிரத்து 959 மரணங்கள் பதிவாகியுள்ளன. இதில் முதல் கொரோனா அலையில் 13 மரணங்களும் இரண்டாது கொரோனா அலையில் 596 மரணங்களும் பதிவாகியுள்ளதுடன், மூன்றாவது கொரோனா அலையில் மாத்திரம் 3 ஆயிரத்து 350 மரணங்கள் இதுவரை பதிவாகியுள்ளன.

## ஜே.பி. பதவிக்கான..

6 அம்சங்களை உள்ளடக்கிய அறிவுறுத்தல் பட்டியலில் “விண்ணப்பப்படிவம் சிங்களம் அல்லது ஆங்கிலத்தில் தெளிவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்” என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், குறித்த விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள அறிவுறுத்தல் வழிகாட்டியானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் குறிப்பிட்டுள்ளன.

தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டிய நீதியமைச்சே இவ்வாறு புறக்கணிப்பினை செய்துள்ளமை தமிழர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## சிறுவர்களை...

அவ்வாறான வீடுகளை எதிர்வரும் சில நாட்களில் சோதனை செய்வதற்கு நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

சிலவேளை, அந்த வீடுகளில் வயது குறைந்த சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தால் வீட்டு உரிமையாளரை கைதுசெய்வதற்கும் நடவடிக்கையெடுக்கப்படும். மசாஜ் நிலையங்களில் இவ்வாறான சிறுவர்களை பயன்படுத்தி இதுபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற தகவல் கிடைத்தால், நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்போம்.

இதேவேளை, பணிபுரியும்போது தீ விபத்துக்குள்ளாகிய சிறுமியின் மரணம் குறித்த பொலிஸ் விசாரணையில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை திருப்தியடையவில்லை. இதனை நாங்கள் பொலிஸாருக்கு எழுத்துபூர்வமாக அறிவித்துள்ளோம் - என்றார்.

## வெளிநாட்டிலுள்ள...

மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட மீனவர்களின் படகுகளிலிருந்து ஆழ்கடலில் வைத்து களவாடப்படும் மீன்கள், சுறுக்குவலைகள் தொடர்பில் நேற்று மாளிகைக்காடு அந்நூர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற மீனவர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் கூறியதாவது ,

எங்களுடைய மீன்களை களவு எடுக்காதீர்கள் என்றுதான் கூறுகின்றோம். களவு எடுக்க வேண்டாம் எனக் கூறுவதென்பது குற்றமா என கேட்க விரும்புகின்றேன். நாட்டில் பல களவுகள் இடம்பெற்று கொண்டுதான் இருக்கின்றன. சட்டமொன்று நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதி சட்டத்தை திருத்துவதற்கான ஒரு சட்டமூலமாகும். அதாவது வெளிநாட்டிலுள்ள கறுப்புப்பணத்தை நாட்டிற்குள் கொண்டுவருவது சட்டமாக்கப்படுகின்றது என்பதாகும்.

புதிதாக வந்திருக்கின்ற நிதியமைச்சர் எடுத்திருக்கின்ற முதலாவது நடவடிக்கை இது.யார் கறுப்புப்பணத்தை கொண்டுவரப்போகின்றார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இவ்விடயத்தை சவாலுக்குட்படுத்த பல மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். கறுப்புப் பணத்தை வெள்ளயடிக்கும் பொறிமுறையும் மேற்கொள்ளப்படுகின்றது - என குறிப்பிட்டார்.

## டயகம சிறுமி...

சம்பவம் தொடர்பில் இதுவரை 20 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

உயிரிழந்த சிறுமியின் பிரேத பரிசோதனை மற்றும் வங்கிக் கணக்கறிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அதற்கமைய, இதுவரை முன்னெடுக்கப் பட்டுள்ள விசாரணைகளுக்கமைய, குறித்த சிறுமி கொழும்பிற்கு அழைத்துவரப்பட்டு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இவ்வாறான செயற்பாடுகள் ஆட்களை விற்பனைசெய்யும் குற்றமாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த குற்றச்செயல் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதீனின் மனைவியான 46 வயதான பெண்ணும், மனைவியின் தந்தையான 70 வயதான ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுமியை டயகமயிலிருந்து கொழும்பிற்கு தொழிலுக்காக அழைத்துவந்த தரகரான 64 வயதான நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ளவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி 72 மணித்தியால தடுப்புக்காவல் உத்தரவை பெற எதிர்பார்த்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

## பணிப்பெண்ணொருவர்...

இந்த 20 வாக்குமூலங்களில் குறித்த சிறுமி ரிஷாத் பதியுதீன் வீட்டிற்கு வீட்டுவேலைக்கு அழைத்துவரப்படுவதற்கு முன்னர் அந்த வீட்டில் வேறு இரு பெண்கள் பணி புரிந்ததாக தெரியவந்துள்ளது. இந்த பெண்களையும் பொன்னையா பண்டாரம் என்ற தரகரே அழைத்து வந்துள்ளதும் தெரியவந்துள்ளது.

குறித்த இரு பெண்களில் ஒருவருக்கு தற்போது 32 வயது என்பதோடு, மற்றைய யுவதிக்கு 22 வயதாகும். இருவரும் டயகம பிரதேசத்தில் வசித்துவருகின்றனர். இதற்கிடையில் டயகம சிறுமி குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதற்கு டயகம பகுதிக்குச் சென்றுள்ள விசாரணை குழுக்களால் டயகம பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய யுவதியிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அவரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலத்திற்கமைய அவர் 2015ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டுவரை முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிப்பெண்ணாக பணி புரிந்ததாக தெரிவித்துள்ளார்.

அவர் பணிப்பெண்ணாக பணிபுரிந்த போது இரு சந்தர்ப்பங்களில் நபரொருவரால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டபோது அவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நபர் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் மனைவியின் சகோதரரான 44 வயதுடைய மதவாச்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஷியாப்தீன் இஸ்மதீன் என்பது தெரியவந்துள்ளது. அதற்கமைய குறித்த நபர் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பிலும் மேலதிக விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, குறித்த யுவதி தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் அமைச்சராக பதவி வகித்தபோது அவரது உத்தியோகபூர்வ இல்லத்திலேயே இவ்வாறு இரு சந்தர்ப்பங்களில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கொழும்பு - மெகசின் வீதியிலுள்ள குறித்த உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்று இது தொடர்பில் விசாரணை அதிகாரிகளால் கண்காணிப்பு குறிப்புகள் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. இது தொடர்பிலும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

டயகம சிறுமியின் உயிரிழப்பு தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கப்பால் இந்த பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விசாரணையும் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார்.

# தொழில் வயதெல்லையை 18 ஆக அதிகரிக்க தீர்மானம்!

## • இரு மாதங்களில் சட்டமாகிறது

## • 76 தொழில்கள் ஆபத்தானவை

ஊழியர்களை தொழிலுக்கு இணைத்துக்கொள்ளும் வயதெல்லையை 18 ஆக அதிகரிப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, அடுத்த இரு மாதங்களில் அதனை நாடாளுமன்றில் முன்வைத்து சட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

1956ஆம் இலக்க 47ஆம் சரத்தின்படி, 14 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தொழில்களுக்கு செல்லும் சந்தர்ப்பம் காணப்பட்டது.

எவ்வாறாயினும், கடந்த ஜனவரி மாதம் தொழிலுக்கு செல்வதற்கான வயதெல்லை 16 ஆக அதிகரிக்கப்பட்டது. இதன்படி, 16 வயதுடைய ஒருவரை வேலைக்கு அமர்த்தினாலும், அவரை ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்த முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், சிறுவர் தொழிலாளர்களை இல்லாதுசெய்யும் நோக்கில் புதிய திருத்தத்தின் அடிப்படையில் ஊழியர்களை தொழிலுக்காக உள்வாங்கும் வயதெல்லையை 18 ஆக உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதுவரை ஆபத்துகள் நிறைந்த 52 தொழில்கள் கண்டறியப்பட்டுள்ளதோடு, புதிய திருத்தத்தின்படி 76 தொழில்கள் ஆபத்துகள் நிறைந்த தொழில் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

தொழில், நீதி மற்றும் கல்வி அமைச்சுடன் இணைந்து இந்தத் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

## ஒன்பது மாகாணங்களிலும்

# சிறுவர்களுக்கான நீதிமன்றங்கள்

நாட்டில் சிறுவர்களுக்கான நீதவான் மற்றும் உயர்நீதிமன்றங்கள் இரண்டு மாத்திரமே உள்ளன. சிறுவர்கள் தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்கு இவை போதுமானதல்ல என்பதால் மாகாண மட்டத்தில் சிறுவர்கள் தொடர்பான நீதவான் நீதிமன்றமும், மேல் நீதிமன்றமும் அமைக்கப்படவுள்ளன.

இதேபோன்று, வழக்கு விசாரணை சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் வயதானவர்களுடன் பிரச்சினைகளுக்கு உள்ளாகும் நிலை ஏற்படுகின்றது.

சிறுவர்கள் தொடர்பான வழக்குகள் ஒத்திவைக்கப்படுகின்றமையும் நிலவுகின்றது. இந்த நிலைமையை கவனத்திற்கொண்டு, அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில், 18 நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டிருப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதித் தலைவர் சுஜாதா அழகப்பெரும தெரிவித்துள்ளார்.



நாட்டில் காலம் கடந்த சிறுவர்கள் தொடர்பான சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.



*பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவிற்கமைய மாதாந்தம் பௌர்ணமி தினங்களிலும் நடைபெறும் "அமாதம் சிசிலச" தர்ம உபதேச தொடரின் 212ஆவது உபதேச நிகழ்வு நுவரெலியாவிலுள்ள பிரதமர் இல்லத்தில் நேற்று நடைபெற்றதை படத்தில் காணலாம்.*

## அதிபர் – ஆசிரியர்களின் தொழிற்சங்கங்களினால் வவுனியாவில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

(வவுனியா நிருபர்)

அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையை தீர்க்கக் கோரியும், கொத்தலாவ பல்கலைக்கழகத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வவுனியாவில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையம் முன்னால் அதிபர், ஆசிரியர்களின் தொழிற்சங்கங்களின் கூட்டிணைவில் நேற்று குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு வேண்டும், கல்வியை இராணுவமயப்படுத்தாதே, இலவசக் கல்வியை சிதைக்காதே, கொத்தலாவ பல்கலைக்கழகத்தை நிறுத்து போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், பழைய பஸ் நிலையத்திலிருந்து நகர மணிக்கூட்டு கோபுர சந்தி வரை சென்று அங்கிருந்து கண்டி வீதி ஊடாக வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிமனை



வரை சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் மீண்டும் கண்டி வீதி ஊடாக பழைய பஸ் நிலையத்தை அடைந்து அங்கு வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும். அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளது. அதனால் எமது தொழிற்சங்கப் போராட்டங்கள் தொடரும். இலவசக் கல்வியை ஒழித்து கல்வியில் இராணுமயமாக்கலை இந்த அரசாங்கம் செய்து வருகின்றது. அதனை உடனடியாக நிறுத்தவேண்டும். அதிபர், ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கையை தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் – என்றனர்.

பெருளமளவான அதிபர், ஆசிரியர்கள் குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டமையால் கண்டி வீதி போக்குவரத்து சுமார் ஒரு மணிநேரத்திற்கு மேலாக பாதிப்படைந்திருந்தது. பின்னர் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றி போக்குவரத்தை சீர்செய்திருந்தனர்.

## திருமண நிகழ்வுகளை மேற்பார்வை செய்ய விசேட நடவடிக்கை

சுகாதார ஒழுங்குவிதிகளை பின்பற்றாது திருமண நிகழ்வுகளை ஏற்பாடுசெய்வோர் மேற்பார்வை செய்யப்படுவதோடு, அவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, நேற்றுமுதல் நடத்தப்படும் திருமண நிகழ்வுகளை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்பார்வை செய்யவுள்ளதாக சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

திருமண நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர், சுகாதார விதிகளை பின்பற்றாது செயற்பட்டுள்ளமை தொடர்பான நிழல்படங்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் கொவிட்-19 ஒழிப்பிற்கான தேசிய செயலணியின் தலைவர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில், இனிவரும் நாட்களில் நடத்தப்படும் திருமண நிகழ்வுகள் கண்காணிக்கப்பட்டு, தனிமைப்படுத்தல் விதிக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## முன்னாள் அமைச்சர் மன்சூருக்காக கல்முனையில் துஆ பிரார்த்தனை!



நூருல் ஹுதா உமர்

கல்முனையை செதுக்கிய சிற்பி என போற்றப்படும் முன்னாள் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் கலாநிதி ஏ.ஆர்.எம்.மன்சூரின் நாலாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி துஆ பிரார்த்தனையும், நினைவுரையும் நேற்று வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையை தொடர்ந்து கல்முனை மக்களின் ஏற்பாட்டில் கல்முனை முஹையத்தீன் ஜும்மா பெரியபள்ளிவாசலில் நடைபெற்றது.

மௌலவி அஸ்ஸெக் டீ.ஆர்.நௌபர் அமீன் (வாஹிதி), கடந்த காலங்களில் முன்னாள் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் கலாநிதி ஏ.ஆர்.எம்.மன்சூர் இனங்களுக்கிடையிலான உறவுப் பாலமாகவும் அபிவிருத்திகள் செய்வதில் கொண்டிருந்த உத்வேகம் தொடர்பிலும் உரை நிகழ்த்தியதுடன், முன்னாள் அமைச்சருக்காக துஆ பிரார்த்தனையும் நிகழ்த்தினார்.

இதன்போது கொரோனா அலையிலிருந்து நாடு விடுபடவும், கொரோனா தடுப்பில் ஈடுபடும் சகல தரப்பினருக்கும் அருள் வேண்டியும் பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்ஸூர் உட்பட கல்முனை மக்கள் பலரும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## டெவோன் நீர்வீழ்ச்சியில் வீழ்ந்த யுவதியை தேடும் பணியில் இராணுவத்தினர்







(க.கிஷாந்தன்)

291 அடி உயரமுள்ள டெவோன் நீர்வீழ்ச்சியிலிருந்து கீழே விழுந்து காணாமல்போன யுவதியை தேடுவதற்காக இராணுவம் நேற்று சிறப்பு நடவடிக்கை மேற்கொண்ட போதிலும், யுவதி குறித்து நேற்று மாலை வரை எந்த தகவலும் கிடைக்கவில்லை என்று திம்புள்ள - பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக நான்கு நாட்கள் தேடிய பின்னர், சுமார் 200 பேர் அடங்கிய இராணுவக் குழு நீர்வீழ்ச்சியின் மேல் மற்றும் கீழ் பகுதிகளை தேடியது.

நீர்வீழ்ச்சியின் மேல் பகுதியை குறுகிய தூரத்திற்கும், நீர்வீழ்ச்சியின் ஒரு பகுதியையும் கீழ் பகுதியிலிருந்து மேலே தேடுவதற்கு இராணுவத்தினர் கயிறுகளைப் பயன்படுத்தினர். ஆனால், காணாமல்போன யுவதியின் எந்த தடயமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று தேடல் குழு தெரிவித்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (18.07.2021) பிற்பகல் நான்கு இளம் பெண்கள் டெவோன் நீர்வீழ்ச்சியைப் பார்வையிடச் சென்றிருந்தனர். அதுமட்டுமல்லாமல் நீர்வீழ்ச்சியின் மேல் பகுதியிலிருந்து செல்பி புகைப்படம் எடுத்துக் கொண்டமையும் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இவ்வாறு நீர்வீழ்ச்சியிலிருந்து கீழே விழுந்து காணாமல்போனவர் லிந்துலை சென்தோமஸ் தோட்டத்தைச் சேர்ந்த எம்.பவித்ரா (வயது - 19) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.



பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்காமல் சில சரத்துகளை மாத்திரம் மாற்றம் செய்வதன்மூலம் சட்டத்தை திருத்தி தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரை தொடர்பில் பல விமர்சனங்கள் எழுந்துள்ளன.

சட்டவல்லுனர்கள், ஜனநாயகவாதிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், அரசியல் கட்சிகள், சர்வதேச நாடுகள் உட்பட பலதரப்புகள் இந்தச் சட்டத்தினால் ஏற்பட்ட கடும் மக்கள் விரோதப்போக்கை கண்டித்து இதை நீக்குமாறு வலியுறுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். ஏற்கனவே வீழ்ந்துசெல்லும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம் என புதிய நிதி அமைச்சர் நாட்டுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார்.

இந்தச் சட்டத்தை நீக்காதுவிட்டால் ஐரோப்பிய ஒன்றிய வரிச்சலுகை வழங்கப்பட மாட்டாது. எமது ஏற்றுமதியும் அந்நிய செலாவணியும் பெரும் பாதிப்புக்குள்ளாகும். அப்படியான அபாய நிலைக்கு நாட்டை இட்டுச்செல்லும் பரிந்துரையை ஜனாதிபதி ஆணைக்குழு வழங்குவது எதற்காக என்று கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

ஜனாதிபதியினால் ஏற்படுத்தப்பட்ட ஆணைக்குழு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கத் தேவையில்லை என்று ஜனாதிபதிக்கு பரிந்துரை வழங்குவது வேலிக்கு ஓணான் சாட்சியாக அமைவது போல் இருக்கிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தினால் தமிழினம் சொல்லொணாத கஷ்டங்களை அனுபவித்துவந்தது. இப்போதும் அனுபவித்து வந்திருக்கிறது. பல தசாப்தங்களாக விசாரணையோ, வழக்குகளோ, பிணையோ இன்றி பலர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். பலம்மிக்க இளைய சமுதாயம் இந்த நாட்டைவிட்டு குடிபெயர்வதற்கும் இனக் குடிப்பரம்பலில் சிதைவை ஏற்படுத்துவதற்கும் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது.

சட்டவிரோதமான கைதுகள், காலவரையறையற்ற தடுப்பு, பிணை வழங்காமை, குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விடுவிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியாத சூழ்நிலை என்று அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகவே அமைந்திருக்கிறது. தமிழர்களின் நியாயமான போராட்டத்தை பயங்கரவாதமாக சித்திரித்து இளம் சமுதாயத்தை வகைதொகையின்றி கைதுசெய்ததோடு சித்திரவதைக்கும்

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2021, ஜூலை 24ஆம் திகதி, சனிக்கிழமை**

# மாற வேண்டிய நிலைமை!

உள்ளாக்குவதற்கே இந்த சட்டம் பயன்படுத்தப் பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமன்றி, தென்னிலங்கையிலும் மக்களை நசுக்க இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இன்று தமது தோல்விகளை மறைப்பதற்கும் தமக்கு எதிராக ஜனநாயகப் போராட்டத்தை நடத்த முற்படுபவர்களை கைதுசெய்வதற்கும் அரசியல் பழிவாங்கல்களை அரங்கேற்றுவதற்குமே இந்தச் சட்டம் பயன்பட்டு வருகிறது.

ஜனநாயக விழுமியங்களை மதிக்காத போற்றப்படாத இந்த அரசாங்கத்தில், இந்தச் சட்டத்தில் சிறிய மாற்றங்களின் மூலம் ஜனநாயகத்தை பேணிவிடலாம் என்று ஜனாதிபதி ஆணைக்குழு சொல்வது மிகவும் வேடிக்கையாக இருப்பதாக தமிழர்களை பிரதிநித்துவப்படுத்தும் அரசியல் கட்சியான ரெலோ கூறியிருப்பது மிகச் சரியாகத்தான் இருக்கிறது.

அப்பாவி மக்களை படுகொலைசெய்து நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகள் விடுவிக்கப்படுகிறார்கள். அதேவேளை, தம்முடைய இனத்திற்காகவும் மக்களுக்காகவும் நியாயமாக குரல் கொடுப்பவர்கள் கைதுசெய்யப்படுகிறார்கள். அதற்கு வழிவகுக்கும் அரசாங்கத்திற்கு பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு பரிந்துரைக்கும் மாற்றங்கள் எந்தவிதத்தில் மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுத்தரும் என்பது தெரியவில்லை.

இதே அரசாங்கத்தில் பதவிவகித்த காலங்களில் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு ஆதரவாக செயற்பட்டவர்கள் கடந்த காலங்களில் அதே சட்டத்தின்கீழ் ஆதாரங்களின்றி கைதுசெய்யப்பட்டு வழக்கு விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்டதை அல்லது தடுத்து வைக்கப்பட்டு வருவதை இந்த நாடு நன்கு அறியும். தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல், முழு நாட்டிலும் அராஜகத்தையும் சர்வாதிகாரத்தையும் நிலைநிறுத்த பயன்படும் இந்தச் சட்டத்தில், எந்த மாற்றங்களும் இதன் அடிப்படை நோக்கத்தை சீர்செய்து விடப்போவதில்லை. ஆகவே முற்றாக இந்தச் சட்டமூலம் நீக்கப்பட வேண்டும் என்பதே தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் ஜனநாயகத்தை விரும்பும் அனைவரினதும் விருப்பாக இருக்கிறது.


பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் எல்லா துன்பங்களையும் அனுபவித்த பின்னர் இறுதியில் குற்றங்கள் நிரூபிக்கப்படாமல் விடுதலைசெய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏராளமாக உள்ளன. அதேபோல் பயங்கரவாத தடைச் சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனவர்களின் பட்டியலும் நீளமானது. இப்போதும் சீனாவின் கடனில் தங்கி வாழும் இலங்கை அரசு, மேற்குலக நாடுகளின் உதவியை நம்பாமல் பயங்கரவாத தடைச்சட்டங்களில் வெறுமனே சில திருத்தங்களை மட்டும் செய்து பூச்சாண்டி காட்ட தயாராகிக் கொண்டிருக்கிறது.

பயங்கரவாதம் என்பதற்கே இங்கு சரியான வரைவிலக்கணம் இல்லை. தமது இன, மொழி, மத சுதந்திரத்திற்காக போராடும் அனைவருமே பயங்கரவாதிகளாக பார்க்கப்படும் நிலைமையே இருக்கிறது. பயங்கரவாத தடைச்சட்டம் இருக்கும்வரை சிறுபான்மை இன மக்கள் அனைவரும் பயங்கரவாதிகளாகவே பார்க்கப்படுவார்கள். அந்த நிலைமையே மாற்றியமைக்கப்படவேண்டும்.

# பற்றி எரிந்தது கொழும்பு...



# பொரளையிலிருந்து ஆரம்பம்



எம்.ஐ.முபாறக்
(ஊடகவியலாளர்)

( நேற்றைய தொடர்ச்சி )

கொழும்புக்கு உடல்கள் சென்றதும் ஒரே பரபரப்பு நாட்டில். அப்போதைய அரசுக்கே அச்சம்.

உடல்களை அவர்களின் ஊர்களுக்கு அனுப்பி வைத்தால் இனக்கலவரம் ஏற்படலாம்.

அஞ்சுகிறது அரசு. இதனால் பொரளை கனத்தையில் அடக்குவதற்குத் தீர்மானிக்கிறார் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன.

அதை நிராகரிக்கிறார் பிரதமர் ஆர்.பிரேமதாச. அவரவர் உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே பிரேமதாசவின் தீர்மானம்.

இருந்தும்,ஜே.ஆரின் விருப்பப்படியே நடக்கிறது.

வெட்டப்படுகின்றன குழிகள். 14 குழிகள். ஏன் 14..? மரணித்தவர்கள் 13தானே...

வைத்தியசாலையில் இருக்கும் உபாலி பெரேராவும் மரணித்துவிட்டார் என்றே வருகிறது செய்தி.

அவருக்கும் சேர்த்துத்தான் குழி...

உபாலியின் வீட்டுக்கே போய் கூறுகிறார்கள் இராணுவத்தினர். அவர் மரணித்துவிட்டார் என்றே.



கொழும்புக்கு வந்து உடலை எடுத்துச் செல்லுமாறு கூறுகிறார்கள்.

ஓடி வருகிறார்கள் உறவினர்கள் பதறியடித்துக்கொண்டு...

கொழும்பு இராணுவ வைத்தியசாலைக்கு வந்து பார்த்தால் மகிழ்ச்சி. அவர் இறக்கவில்லை. உயிருடன்...

இப்போது எல்லோரின் கவனமும் கனத்தை மீதுதான்.



படையெடுக்கிறார்கள் அங்கு. இறுதிக் கிரியைக்காக...

பொரளை நடைபாதையில் வழமைபோல் வியாபாரம். தமிழர்களின் கடைகள்தான் அதிகம்.

பஸ்களுக்காக காத்து நிற்கின்ற கூட்டம் இன்னொரு புறம்.

இதைத் தவிர வேறு எந்த நிகழ்வையும் பொரளையிலோ கொழும்பின் ஏனைய இடங்களிலோ காண முடியவில்லை.

வெறிச்சோடி கிடக்கிறது கொழும்பு.

நிரம்பி வழிகிறது கனத்தை...

அசம்பாவிதம் எதுவும் நடந்துவிடக்கூடாது. பொலிஸார் கூடுதல் கவனம்.

அதற்கேற்ப பாதுகாப்பு ஏற்பாடுகள். கூடிய கவனம் செலுத்துகிறார் பொலிஸ் உயர் அதிகாரி கபூர்.

மறுபுறம் இராணுவம். அவர்கள் நிற்பதோ சடலங்களின் வருகையை எதிர்பார்த்து...

காத்து நிற்கிறார்கள் மக்கள். உடல்களின் வருகையை எதிர்பார்த்து... ஆனால், தாமதம். இதனால் பதற்றம்.

குழம்புகிறார்கள் அவர்கள். இறங்குகிறார்கள் வீதிக்கு. நடத்துகிறார்கள் வேட்டையை...அந்தக் கலவரத்தை.

மறுபுறம் இன்னொரு சலசலப்பு.அங்கு வந்து நிற்கும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் சிலரால்...

அவர்களுக்கும் கபூரின் பொலிஸ் அணிக்கும் இடையில் வாக்குவாதம்.

அப்படியே இருக்கையில், சற்றுத் தள்ளி இன்னொரு சம்பவம்.

பாரிய தீப் பிழம்பு...அது பொரளை சந்தியில்...

ஆம்... தீ வைக்கப்படுகின்றன அங்குள்ள தமிழர்களின் கடைகள்.

அந்தக் கடைகளின் மத்தியில் மூன்று தேங்காயெண்ணெய் கடைகள். அருகருகில்...

அக்கடைகளுக்கு முன்பாக முழுமையாக நிரப்பப்பட்ட எண்ணெய் பரல்கள் மூன்று.

முயற்சி செய்கிறார்கள் அவற்றைத் தூக்குவதற்கு பல இளைஞர்கள் ஒன்றிணைந்து...

அது வெற்றியளிக்கவில்லை...

வீதியில் கவிழ்த்து விடுகிறார்கள் பரல்களை. பரலின் மூடிகளை கழட்டி...

ஓடுகிறது எண்ணெய். வீதி நெடுகே...

வழுக்கி வீழ்கிறார்கள் அந்த வீதியால் வந்த மக்கள்.

பற்றி எரிகின்றன கடைகள். அங்கு ஓர் ஆறு மாடிக் கட்டடம். அது ஒரு வர்த்தக நிலையம்.

அதுவும் தீக்கிரை. வெடித்துச் சிதறுகின்றன அக்கட்டடத்தின் கண்ணாடிகள். தீயின் சூட்டால்...

முழு பொரளை சந்தியும் கரும்புகைக்குள்...

அங்கிருந்து மருதானை பக்கம் திரும்பிப் பார்த்தால்...அங்கும் அதேநிலைதான்...

வீதியில் நிற்க முடியவில்லை. கடும் சூடு. தாங்க முடியா சூடு.

சிதறி ஓடுகிறார்கள் மக்கள் நாலா பக்கமும். இறுதிக் கிரியைக்காக வந்தவர்கள் அவர்கள்.

பொருட்களை அள்ளிச் செல்கிறார்கள் சிலர். எரியும் கடைகளுக்குள் புகுந்து...சூட்டையும் பொருட்படுத்தாது...



இப்படித்தான் ஆரம்பம் அந்த ஜூலை கலவரம். இங்கிருந்துதான் ஆரம்பம். பொரளையிலிருந்து...

நாட்டின் எல்லா இடங்களுக்கும் பரவுகிறது இந்தக் கலவரம். வடக்கு, கிழக்கு தவிர...

அழிக்கப்படுகின்றன தமிழர்களின் வர்த்தக நிலையங்கள், வீடுகள், வாகனங்கள், உயிர்கள் என எல்லாம்.

தொடர்ச்சியாக ஏழு நாட்கள் இதே நிலைதான்...

அப்போதைய ஐ.தே.க. அரசு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன இதைக் கட்டுப்படுத்த எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

அன்றைய அரசின் கைக்கூலிகளே இதனை முன்னின்று செய்தனர்.

அமைச்சர் சிறில் மெத்திவ் தலைமையில் அன்று இயங்கியது தொழிற் சங்கம் ஒன்று. ஐக்கிய தேசிய கட்சியினுடையது. தேசிய சேவைகள் சங்கம்.

நாடுபூராகவும் அதன் உறுப்பினர்கள். அவர்களின் கைகளில் தமிழர்களின் வாக்காளர் பட்டியல்.

அதை வைத்துக்கொண்டுதான் இலகுவாக முடித்தார்கள் தமிழர்களின் கதையை. அழித்தார்கள்



சூறையாடினார்கள் அவர்களின் சொத்துகளை...

எப்படிப்பட்ட கொடுமை எப்படிப்பட்ட அநியாயம்.

பார்ப்போம் நாளைய தொடரில்...



# இந்திய அரசில் சர்ச்சையை ஏற்படுத்திய





# பெகாசஸ்

**ரமணி**

நாட்டின் பாதுகாப்புக்காக எதிர் நாடுகளை வேவு பார்க்கும் நடைமுறை உலகெங்கும் பரவலாக உள்ளது. நாட்டின் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக சந்தேகப்படுபவர்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பதும் இதில் அடக்கம். இந்திய அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை உளவு பார்த்த விவகாரம் பூகம்பமாக வெடித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர்கள், அரசியல் விமர்சகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் போன்றவர்களை அரசாங்கம் வேவு பார்ப்பதாக அவ்வப்போது செய்திகள் வெளியாவது வழமை. அரசாங்கம் அதனை பொய் என்பதும் சர்வசாதாரணமான சம்பவம். ஆனால், இந்தியாவில் மட்டும் சுமார் 40இற்கும் அதிகமானவர்களை பாரதீய ஜனதா அரசாங்கம் உளவு பார்த்ததாக 'தி வயர்' இணையப் பத்திரிகை கூறுகிறது. பாரதீய ஜனதாக் கட்சியை எதிர்க்கும் அரசியல் கட்சித் தலைவர்களைத் தவிர, பத்திரிகையாளர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோரும் இந்திய அரசால் கண்காணிக்கப்பட்டதாக 'தி வயர்' இணையப் பத்திரிகை தெரிவித்துள்ளது. இதன் காரணமாக பாரதீய ஜனதா அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது.

உலகம் முழுவதும் கிட்டத்தட்ட 50,000இற்கும் மேற்பட்டோரின் செல்போன் களை பெகாசஸ் என்ற ஸ்பைவேரைப் பயன்படுத்தி உளவு பார்க்கப்பட்டதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

பெகாசஸ் என்ற ஸ்பைவேர் மூலம் உலகின் முக்கிய பத்திரிகையாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்களின் தொலைபேசிகளையும், கணினிகளையும் அவர்கள் சார்ந்த நாட்டின் அரசாங்கமே உளவு பார்த்தது என்பதுதான் சமீபத்தில் உலக அரசியலை உலுக்கிக்கொண்டிருக்கும் செய்தி. பெகாசஸ் புராஜக்ட் என்ற பெயரில் 'தி கார்டியன்' உள்ளிட்ட 16 ஊடங்கங்கள் நடத்திய ஆய்வில் கிடைத்த தகவலின் அடிப்படையில் உலகம் முழுவதும் சுமார் 50,000இற்கும் மேற்பட்டோரின் செல்போன்கள் ஹேக் செய்யப்பட்டமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

பெகாசஸ் எனப்படும் இரகசிய மென்பொருள், இஸ்ரேலைச் சேர்ந்த என்எஸ்ஓ எனும் இணையப் பாதுகாப்பு (சைபர் செக்யூரிட்டி) நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. பங்களாதேஷ், மெக்சிக்கோ, சவூதி அரேபியா போன்ற பல நாடுகள் என்எஸ்ஓ நிறுவனத்திடமிருந்து பெகாசஸ் மென்பொருளை வாங்கிப் பயன்படுத்துகின்றன.

இனந்தெரியாத ஒருவரிடமிருந்து வரும் ஈ மெயில், எஸ்.எம்.எஸ், வைபர், வட்ஸ் அப் என்பனவற்றை திறந்து பார்த்தால் அந்த இரகசிய மென்பொருள் தனது வேலையை ஆரம்பித்துவிடும். எங்கோ தொலைதூரத்தில் இருக்கும் ஒருவர் அனைத்தையும் கண்காணிப்பார். தொலைபேசியிலுள்ள கெமரா மூலம் தனக்குத் தேவையான புகைப்படங்களையும் அவர் பெற்றுவிடுவார்.

பெகாசஸ் ஸ்பைவேர் ஒரு போனிலிருந்து நீக்கப்படும்போது அது பயன்படுத்தப்பட்டதற்கான தடயங்களும் சேர்ந்தே அழிந்துவிடும் என்பதால், இதனால் பாதிக்கப்பட்ட செல்போன்களைக் கண்டறிவது கடினமாக இருந்திருக்கிறது. தற்போது ஐபோன், சில ஆண்ட்ராய்ட் போன்களில் பெகாசஸை நீக்கும்போது சில தடயங்களை அந்த ஸ்பைவேர் விட்டுச்செல்வதாகக் கூறப்படுகிறது. இதைவைத்தே பெகாசஸ் ஹேக்கிங்கை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். பெகாசஸ் மென்பொருளை செலுத்தியவுடன் கோல், மெசேஜ், என்கிரிப்ட் டெக்ஸ் உள்ளிட்டவற்றை மட்டுமல்ல, மைக்ரோபோன், கெமரா முதலானவற்றையும் நமக்குத் தெரியாமலேயே இயக்க முடியும் என்கிறார்கள். 'இணையவழி ஆயுதம்' என இஸ்ரேல் இதனைக் குறிப்பிடுகிறது.

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, பிரசாந்த் கிஷோர், மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், ஜல்சக்தி அமைச்சர் பிரஹலாத் சிங் பட்டேல், முன்னாள் தேர்தல் ஆணையர் அசோக் லவாசா, மருத்துவ வல்லுநர் ககன்தீப் காங், ஹரி மேனன், உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகய் மீது பாலியல் புகார் அளித்த பெண், அவரின் உறவினர்கள், தமிழ்நாட்டில் மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி ஆகியோர் தொலைபேசிகள் இட்டுக்கேட்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஹேக் செய்யப்பட்டதாக வெளியான ஒவ்வொருவரும் மத்திய அரசுடனோ, முக்கிய அதிகாரிகள், தலைவர்களுடனோ கருத்தியல்ரீதியில் எதிர்நிலையில் செயறபட்டவர்கள் என்பதுதான் இதில் அதிர்ச்சி தரும் உண்மை.

பெகாசஸ் மென்பொருளை தாங்கள் பயன்படுத்தவில்லை என்றுதான் மத்திய அரசு சொல்கிறதே தவிர, அதை வாங்கவில்லை எனக் கூறவில்லை. ''இந்தியா பெகாசஸ் ஸ்பைவேரை பயன்படுத்தவேயில்லை'' என மத்திய உள்துறை அமைச்சர் கூறியிருக்கிறார். மத்திய அரசு உளவு பார்க்கவில்லை, என்றால் இந்திய அரசின் அமைச்சர்கள், தேர்தல் ஆணையர், நீதிபதிகள், தலைவர்கள், பத்திரிகையாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்களின் செல்போன்களை உளவு பார்த்தது யாரென்பதை இந்திய அரசாங்கம் அறிவிக்க வேண்டும்.

பெகாசஸ் மூலம் மக்கள் உளவுபார்க்கப்படுவதை 2016ஆம் ஆண்டு ஐக்கிய அரசு அமீரகத்தைச் சேர்ந்த மனித உரிமை செயற்பாட்டாளர் அகமது மன்சூர் கண்டறிந்தார். மன்சூரின் தொலைபேசிக்கு பல எஸ்.எம்.எஸ்கள் வந்துள்ளன. அதிலுள்ள இணைப்புகள் தவறான நோக்கத்திற்காக அனுப்பப்பட்டிருக்கலாம் என அவர் சந்தேகப்பட்டார். இதனால், டொராண்டோ பல்கலைக்கழகத்தின் சிட்டிசன் ஆய்வகத்திலுள்ள சைபர் செக்யூரிட்டி நிபுணர்களிடம் தனது தொலைபேசியை ஒப்படைத்து, தனக்கு வந்துள்ள எஸ்.எம்.எஸ்.கள் குறித்து ஆராயுமாறு கூறியுள்ளார்.

மன்சூரின் சந்தேகம் நிரூபிக்கப்பட்டது. ஒருவேளை எஸ்.எம்.எஸ்.களில் இருந்த இணைப்புகளை அவர் பார்த்திருந்தால், அவரது தொலைபேசி பெகாசஸ் மால்வேரால் பாதிக்கப்பட்டிருக்கும். மன்சூரின் தொலைபேசியை ஆராய்ந்த சைபர் பாதுகாப்பு நிபுணர்கள், இந்தத் தாக்குதலை கண்டுபிடிப்பது மிகவும் கடினமான ஒன்று எனக் கூறியுள்ளனர்.

அதன்பின்னர் 2017ஆம் ஆண்டு பெகாசஸ் மூலம் மக்களை வேவு பார்ப்பதாக மெக்சிக்கோ அரசு மீது குற்றஞ்சாட்டப்பட்டது. மெக்சிக்கோவில் மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆர்வலர்களுக்கு எதிராக பெகாசஸ் பயன்படுத்தப்பட்டு வருகிறது 'தி நியூயோர்க் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டது. தங்களது போன்களை ஒட்டுக் கேட்பதாக பிரபல பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மெக்சிக்கோ அரசுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தனர்.

சவூதி அரேபியாவைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் கஷோக்ஜி, கடந்த 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், துருக்கி இஸ்தான்புல்லிலுள்ள சவூதி துணை தூதரகத்துக்குச் சென்றபோது கொலைசெய்யப்பட்டார். அவர் கொலை செய்யப்படுவதற்கு முன்பு அவரது தொலைபேசியும், கொலைசெய்யப்பட்டதற்கு பின்பு அவரது குடும்பத்தினரின் தொலைபேசிகளும் பெகாசஸ் மூலம் வேவு பார்க்கப்பட்டுள்ளன. கடந்த 2017ஆம் ஆண்டு பெகாசஸ் மென்பொருளை சவூதி அரேபியா வாங்கியது. நாட்டிலுள்ள மாறுபட்ட கருத்து கொண்டவர்களை நசுக்குவதற்கும், வெளிநாடுகளிலுள்ளவர்களைக் கண்காணிப்பதற்கும் இந்த மென்பொருளை சவூதி பயன்படுத்தியது என 'தி நியூயோர்க் ரைம்ஸ்' கூறுகிறது.

டொராண்டோ பல்கலைக்கழகத்தின் சிட்டிசன் ஆய்வகம் வெளியிட்ட அறிக்கையில், அல்-ஜசீராவின் தொலைக்காட்சியின் தொகுப்பாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் நிர்வாகிகள் என 36 பேரின் தொலைபேசிகள் பெகாசஸ் மூலம் ஒட்டுக் கேட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எங்கள் தொழில்நுட்பம் பாலியல் மற்றும் போதைமருந்து கடத்தல் குற்றங்களைத் தடுப்பதற்கும், காணாமல்போன அல்லது கடத்தப்பட்ட குழந்தைகளைக் கண்டுபிடிப்பதற்கும், கட்டட இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களைக் கண்டுபிடிப்பதற்கும், ஆபத்தான டிரோன்களிடமிருந்து வான்வெளியைப் பாதுகாப்பதற்கும், பயங்கரவாத குற்றங்களைத் தடுப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. எங்கள் நிறுவனம் உயிர்களை காப்பாற்றும் பணியில் இருக்கிறது. எங்கள் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் போலியானவை என என்எஸ்ஓ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஃபார்பிட்டன் ஸ்டோரீஸ் செய்தியிலுள்ள பொய்யான குற்றச்சாட்டுகளை நாங்கள் உறுதியாக மறுக்கிறோம். அவதூறு வழக்கு தொடர்வது குறித்து நாங்கள் பரிசீலித்து வருகிறோம் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

என்எஸ்ஓ அமைப்பு இதுவரை தன்னுடைய உளவு மென்பொருளை எந்தெந்த நாடுகள் பயன்படுத்துகின்றன என்பதை வெளிப்படையாக அறிவிக்கவில்லை. ஆனால், இந்த மென்பொருள் பெரும்பாலும், ஒரு நாட்டின் அரசுக்கே அதிகாரபூர்வமாக விற்கப்பட்டுள்ளது. அதாவது, அரசின் விசாரணை முகமைகள், அமைப்புகள் இந்த மென்பொருளை வாங்கியுள்ளன. 2018ஆம் ஆண்டு சிட்டிஸன் லேப் அறிக்கையின்படி, இந்தியா, பஹ்ரைன், கஜகஸ்தான், மெக்சிக்கோ, மொராக்கோ, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட45 நாடுகள் பயன்படுத்துவதாகத் தெரிவித்துள்ளது.

உலகெங்கும் அதிர்வலையை ஏற்படுத்திய பெகாசஸ் விவகாரம் இப்போது இந்தியாவை உலுக்குகிறது. தேசநலன், தேசத்தின் பாதுகாப்பு எனத் தொடர்ந்து பேசிவரும் இந்திய மத்திய அரசு தாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. இந்தியா மீது நிகழ்த்தியிருக்கும் இணையவழித் தாக்குதலாகவே இதைப் பார்க்க முடியும். இந்த இக்கட்டிலிருந்து மத்திய அரசு எப்படி வெளிவரப் போகிறது?' என்பதுதான் அனைவரின் கேள்வியாக இருக்கிறது. பல்வேறு தரப்பினரும் மத்திய அரசைக் கேள்விகளால் துளைத்துக்கொண்டிருக்கிறார்கள். மற்ற பிரச்சினைகளை எளிதில் கையாண்ட மத்திய பா.ஜ.க. அரசு உண்மையில் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள முடியாமல் திணறிவருவது உண்மைதான் என அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

# 82ஆவது அகவையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

**தேவதாஸ் சவரிமுத்து**
**சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்**

அஹிம்சாவாதி காந்தியின் ஆசீர்வாதமும் ஆசியஜோதி நேருவின் எண்ணக்கருக்களும் ஏற்றிவைத்த ஓர் அமைப்பான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன்று 82 வருடங்களை எட்டிப் பிடிக்கின்றதென்றால் அது காத்திரமான தலைமைத்துவத்தின் அடையாளம். 1939ஆம் ஆண்டு நேரு இலங்கை வந்தார். இலங்கை - இந்தியன் காங்கிரஸ் உதயமானது. 1954களில் அது இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக மாற்றம் பெறுகின்றது. அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் முன் அனுபவம் இ.தொ.காவை இமயத்தில் ஏற்றிவைத்தது.

தலைவர்கள் பிறப்பதில்லை. அவர்கள் உருவாகின்றார்கள் என்பது உலகப் பார்வை. எந்தவொரு சமூகம் அடக்கி ஒடுக்கப்படுகின்றதோ, எந்தவொரு சமூகம் உரிமைகளை இழந்து உபத்திரவப்படுகின்றதோ அச்சமூகத்தை விடுவிக்க நிச்சயம் ஒரு இரட்சக தலைவன் உருவாகவே செய்வான். இதைத்தான் இந்த உலகம் இதுவரை கண்டுவந்திருக்கின்றது. மாண்டுபோன நிலையிலும் மக்கள் மனங்களை ஆண்டுகொண்டிருக்கும் மாபெரும் மக்கள் தலைவர்களின் வரலாறு இதனைத்தான் சொல்கின்றது.

அதன் உதயத்திலேயே இந்திய வம்சவளி தமிழர்களின் எதிர்காலம் நிர்ணயமானது. காரணம், அந்தத்தலைவனின் அணுகுமுறை, சாணாக்கியம், ஆளுமை, ஆளுகை சிறப்பு இதுவே நல்ல தலைமைத்துவத்தின் உலக இலக்கணம். லெனினைபோல், சேகுவராவை போல, மசேத்துங்கை போல தென்கிழக்கு ஆசியாவுக்கே உழைக்கும் மக்களின் உதய சூரியனாக திகழ்ந்தார். ஆனால் அந்தோபரிதாபம் லெனினுக்குவாரிசு இல்லை. சேகுவராவைப் போல போராளி வரவில்லை மசேத்துங்கை மரணத்தோடு அவரின் சித்தாந்தங்களும் செத்துப்போயின.

ஆனால், அதிர்ஷ்டவசமாக இந்த அவலம் இ.தொ.காவின் எழுச்சிமிகு வரலாற்றுக்கு வந்துவிடவில்லை. அன்று அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் சாதித்துக் காட்டினார். தனது சாத்வீக வழியை பேரன் அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு போதித்து ஊட்டினார். இமயம் சரிந்ததுபோன்ற ஐயாவின் மறைவை உபயமாக தாங்கிபிடித்தார். அமரர் ஆறுமுகன் தொண்டமான் முன் இவரின் முழு அர்ப்பணிப்பை பின்னவரும் பின்பற்றினார். அதனால் தலைமைத்துவ வரலாறு தக்கவைக்கப்பட்டது.

வாரிசு அரசியலோ குடும்ப அரசியலோ குழப்பத்திற்கு வழிவகுப்பதே உலக சரித்திரம். இங்கே அது விளக்கிக்கொள்ளப்பட்ட விந்தையே புதிய செய்தி. இ.தொ.கா. ஒரு சமூக சொத்து. அதை ஆக்கிவைத்த தலைமுறை பாதுகாக்கவும் கடமைப்பட்டுள்ளது.

அந்த கடமையைத்தான் தொண்டமான் வம்சம் முக்கிய அம்சமாக கருதுகின்றது. கையில் எடுக்கிறது. அன்று ஐயா அமரத்துவம் அடைந்தார். அவருக்கு நிகரத்துவமான ஒரு தலைமையை தர தயாரானார் அமரர் ஆறுமுகன் தொண்டமான். இன்று அவர் அமரராகிவிட்டார். ஆனால், அஞ்சி நழுவி போகாமல் மக்கள் நலன் காக்கும் பாரிய சவாலை கைகழுவி விடாமல் முற்கிரீடமாக தனது தலைமை ஏற்றுக்கொண்டிருக்கின்றார் இளையவர் ஜீவன் தொண்டமான். ஒரு காவியத் தலைமையின் எச்சங்கள் அச்சமில்லா வடிவில் ஆளுமைகொள்ள ஆரம்பிக்கின்றது. மீண்டும் அதுவே ஜீவன் தொண்டமானின் புதிய பிரவேசம்.

இத்தருணத்தில் 82 வருட கால போராட்ட வரலாறு பற்றி சிறிது சீர்த்தூக்கி பார்ப்பது சிறப்பு. ஏனெனில், ஒரு தலைமையின் இறப்போடு சரித்திரம் முற்றுபெறும் சங்கதியெல்லாம் இங்கு சமாதியாகி போய்விட்டது. தலைமைத்துவப் பண்பின் புதிய பரிமாணத்தை தரிசிக்கும் இந்த தொண்டமான் தலைமுறையின் தடங்களே இ.தொ.காவின் இதுவரை கால பயணத்தில் பாதச்சுவடுகள்.





**இ.தொ.கா. வரலாற்றுச் சுருக்கம்**

தொழிற்சங்கப் பிரிவு அங்குரார்ப்பணம்.

1939 - ஆரம்ப காங்கிரஸ் - பண்டிட் ஸ்ரீ ஜவர்ஹர்லால் நேரு தலைமையில் அப்புத்தளை கதிரேசன் கோயில் மறைந்த பெரியசுந்தரம் முதல் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இலங்கை - இந்திய காங்கிரஸ் மற்றும் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் ஆரம்பம்.

1940 - முதல் மாநாடு கம்பளையில் வரவேற்புக் குழுத் தலைவர் மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் மகளிர் பிரிவு ஆரம்பம், வாலிபர் பிரிவு ஆரம்பம்.

1942ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய காங்கிரஸ் இரண்டாவது மாநாடு.

இதே ஆண்டு ஜூலையில் இலங்கை - இந்திய காங்கிரஸுக்கு அங்கீகாரம் கிடைத்தது.

1945 - நாவலப்பிட்டிய மாநாடு.

1946 ஆம் ஆண்டு முதலாவது தொழிற்சங்கப் போராட்டம்.

1948 - இலங்கை பிரஜாவுரிமை சட்டம் நிறைவேறியது.

1947 - சுதந்திர இலங்கையின் முதல் நாடாளுமன்றத்தில் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் மூலம் மலையகத்திலிருந்து 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

1948 - இலங்கை பிரஜாவுரிமை சட்டத்தின்படி இந்திய வம்சாவளியினரது (தோட்டத் தொழிலாளர்கள்) பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது.

1950 - இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்று பெயர் மாற்றப்பட்டது. சர்வதேச சுதந்திரத் தொழிற் சம்மேளனம் மற்றும் ஏ.ஆர்.ஓ. ஆகிய சர்வதேச தொழிற் சம்மேளனத்தின்அங்கத்துவம் பெற்றது.

1951 - இலங்கை தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் 7 புள்ளி என்றழைக்கப்பட்ட முதல் ஒப்பந்தம செய்துகொள்ளப் பட்டது. இவ்வொப்பந்தம் பணி நீக்கம் சம்பந்தமான விடயங்களை மாத்திரம் உள்ளடக்கியது.

1954 - இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பெயர் மாற்றம்.

1964 - சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம்.

1965 - இ.தொ.கா. அரசியல் கட்சியாகப் பதிவுசெய்யப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை இ.தொ.கா. தொழிற்சங்கமாகவும் விளங்குகின்றது.

1967 - தொழில் பிணக்கு சட்டத்தின் பிரகாரம் தொழில் ஆணையாளரிடம் முதலாம் கூட்டு ஒப்பந்தம் பதிவுசெய்யப்பட்டது. இவ்வொப்பந்தம் சம்பளத்திலிருந்து தொழிற்சங்க சந்தாவை அறவிடுவது (செக் ஒப்) மற்றும் சேவை கால பணம் சம்பந்தமாகவிருந்தது.

1973 - தலைவர் தொண்டமான் நியமன நாடாளுமன்ற உறுப்பினரானார்.

1974 - சிறிமாவே - இந்திராகாந்தி ஒப்பந்தம்.

1974 - வி. அண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றார்.

1977 - பொதுத் தேர்தலில் தொண்டமான் நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார்.

1978 - அமைச்சர் பதவியேற்று 1999 - அவரது மறையும்வரை அமைச்சர் பதவிவகித்தார்.

2011 - இ.தொ.கா. 8 உறுப்பினர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பியது.

**பலத்திற்கு காரணம்**

இ.தொ.காவின் அங்கத்தவர்களில் பெரும்பான்மையானோர் தோட்டத் தொழிலாளர்களாக இருந்தபோதிலும் பல்லாயிரக்கணக்கான வர்த்தகத்துறை ஊழியர்கள், ஆசிரியர்கள், உள்ளூராட்சி மத்திய ஆட்சி தொழிலாளர்களும் அங்கம் வகிக்கிறார்கள். இலங்கை தொழிலாளர்களின் பலம், அதன் அங்கத்தவர்கள் தொகை, அவர்கள் தோட்டத்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் தன்மை, நிர்வாக அமைப்பு, கட்டுப்பாடு ஆகிய காரணிகளில் தங்கியுள்ளது. மூன்று தசாப்தங்களாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இலங்கையில் மட்டுமல்ல, தென் ஆசியாவிலேயே மிகப்பெரிய தொழிற்சங்கமாக விளங்கி வருகின்றது. அதன் உறுப்பினர் தொகை காலத்துக்குக்குக் காலம் வேறுபடுகின்ற போதிலும் என்றுமே மூன்று இலட்சத்துக்கும் அதிகமாக உள்ளது. இதில் பல்லாயிரக்கணக்கான சிங்களத் தொழிலாளரும் அடங்குவர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்கள் தோட்டத்துறையின் எல்லாப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாக இருக்கின்றனர். அத்துடன், வாலிப, மாதர் பகுதிகள் பலம் வாய்ந்தவையாக இருக்கின்றன. கல்வி, தொழிற்பயிற்சி கலை, கலாசாரம், இலக்கியம், விளையாட்டுத்துறை, சமூக சீர்திருத்தம் ஆகிய தொழிலாளரின் வாழ்க்கையில் எல்லா அம்சங்களையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸன் நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் பிணைந்து நிற்கின்றன.

சமீபகாலமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சிங்கள தோட்டத் தொழிலாளர் களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு தோட்டத்துறை சாராத தொழிலாளர்களையும் அரவணைத்துள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அமைப்பு மிகவும் இறுக்கமானது. தோட்ட மாவட்ட, மாநில, தேசிய மட்டங்களாகப் பகுக்கப்பட்டு அறுக்கமாக நிர்வாக, நிதி விடயங்களில் பிணைக்கப்பட்டுள்ளன.

மலையக அரசியலின் இன்றைய மலர்வு இ.தொ.கா. பாசறை தந்திருக்கும் பயிற்சியின் புலர்வு. மலையக அரசியல் கட்சிகளின் பின்புலம் எல்லாமே இ.தொ.கா. சமூகத்திற்கு வழங்கிய கொடைகள். இ.தொ.காவின் இன்றைய உச்சநிலை யாராலும் எட்டிப்பிடிக்க முடியாத ஏற்றம். அன்று தனது தாத்தா விட்ட இடத்திலிருந்து பேரன் ஆறுமுகன் தொண்டமான் வீறுகொண்டு தொடர்ந்தார். இன்று இளைய அடலேறாக ஜீவன் தொண்டமான் தந்தையின் இடத்தை தான் நிரப்பி விந்தை புரிய வீரியம் கொண்டுள்ளார்.

இன்று இ.தொ.கா. இளைய தலைமையை இங்கிதத்துடன் வரவேற்கின்றது. ஒருவரலாறு அப்படியே தொடரப்போகின்றது. அண்ணல் காந்தியும், ஆசியஜோதி நேருவும், அமரர் ஐயாவும், அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஏந்திநின்ற இலட்சியக் கொள்கைகளை இளையவர் இனிதே தாங்கி புனித பயணத்திற்கு கட்டியம் கூறும் காலம் கனிந்திருக்கின்றது.

# ரிஷாட்டை அரசியல் பலிகடாவாக்கவில்லை நாங்கள் நீதிக்காகவே போராடுகின்றோம்

## என்கிறார் வேலுகுமார் எம்.பி.

ரிஷாட் பதியுதீனை சட்டத்தின் பிடிக்குள் இருந்து பாதுகாப்பதற்கோ அல்லது அரசியல் ரீதியில் அவரை பலிகடாவாக்குவதற்கோ எமக்கு எவ்வித தேவையும் கிடையாது.

நீதிக்காகவே நாம் போராடிவருகின்றோம் - என ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

கொள்கை மறந்து - தாவல் அரசியல் நடத்தும் டிலான் பெரேரா போன்றவர்களுக்கு நீதிக்கான எமது குரல் நீலிக்கண்ணீராக தெரிவது குறித்து வியப்படையவேண்டியதில்லை. ஏனெனில், அவர்களின் அரசியல் அப்படி அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

"நாடாளுமன்றத்தில் ரிஷாட் பதியுதீனுக்காக முஜிபூர் ரஹ்மான் எம்.பி. உரையாற்றும்போது, மனோ கணேசன், திகாம்பரம், வேலுகுமார் ஆகியோர் கைதட்டி உற்சாகப்படுத்தினர். மறுபுறத்தில் தமிழ் ஊடகங்களில் பிரசாரம் தேடுவதற்கு நீதி கோருகின்றனர்" - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் ஜூலை 21ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது டிலான் பெரேரா கருத்து வெளியிட்டிருந்தார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் வேலுகுமார் எம்.பியால் கண்டியில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

" டயகம சிறுமி சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் எமக்கு அறியக் கிடைத்ததும், மறுநொடி முதல் அது தொடர்பில் கவனம் செலுத்திவருகின்றோம். சிறுமியின் குடும்பம், ரிஷாட் பதியுதீனின் குடும்பம், பொலிஸார் என சகல தரப்புகளையும் தொடர்புகொண்டு கதைத்து தகவல்களைப் பெற்றுள்ளோம்.

விசாரணை நம்பகரமான முறையில் துரிதமாக இடம்பெறவேண்டும், இதனுடன் தொடர்புபட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்கான அனைத்துவிதமான அழுத்தங்களையும் பிரயோகித்துவருகின்றோம். இப்பிரச்சினையை மனிதநேயத்துடன் அணுகுவதுடன் தேவையான நேரத்தில் அரசியல் ரீதியிலான அழுத்தங்களையும் பிரயோகித்து வருகின்றோம்.

எதிலும் - எப்படியும் அரசியல் நடத்தி, அரசியல் இலாபம் தேடிவிட வேண்டும் என்ற குறுகிய கொள்கையை முன்னிலைப்படுத்தி அரசியல் நடத்திவரும் டிலான் பெரேரா போன்றவர்களுக்கு இது புரியாது. அவ்வாறு புரிந்தாலும் அது தொடர்பில் போலியான தகவலையே பரப்புவார்கள். ஏனெனில், அவர்களின் அரசியல் கலாசாரம். அங்கும், இங்குமாக தாவி தஞ்ச அரசியல் நடத்துபவர்களுக்கு நீதிக்கான குரல்கூட வேறு விதத்தில்தான் விளங்கும்.

ரிஷாட் பதியுதீனை பாதுகாக்கும் நோக்கில் முஜிபூர் ரஹ்மான் உரையாற்றவில்லை. பொலிஸ், சட்டகட்டமைப்பு என சர்வ பலமும் ஆளுங்கட்சி வசம்தான் உள்ளது. எனவே, உண்மை கண்டறியப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதையே வலியுறுத்தினார். இதைத்தான் நாமும் சொல்கின்றோம். எனவே, ரிஷாட் பதியுதீனை பாதுகாப்பதற்கோ அல்லது பழிகடாவாக்குவதற்கான தேவையோ எமக்கு கிடையாது.

ஆனால், டிலான் பெரேரா போன்றவர்கள்தான் இந்த விடயத்தைப் பயன்படுத்தி எதிரணிக்குள் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இப்படியான கருத்துகளை வெளியிட்டு அரசியல் நடத்துகின்றனர். பதுளை மாவட்ட மக்கள் அவருக்கு தக்க பதிலடி கொடுப்பார்கள். நரிகள் ஊளையிடுவதால், நாய்கள் குரைப்பதால் நாம் குழப்பமடையமாட்டோம். நீதிக்கான எமது குரல் ஓங்கி ஒலிக்கும்" - என்றார்.

# அம்பாறை - கல்முனை வீதியை முடக்கி மீனவர்களின் பிரச்சினையை வெளிக்கொணர்வோம்!

## சாணக்கியன் எம்.பி. அழைப்பு



நூருல் {ஹதா உமர்

மீனவர்களின் பிரச்சினைகள் பற்றி பல தடவைகள் அரசு மற்றும் அமைச்சர்களுக்கும் பேசியுள்ளேன். ஆனால், எவ்வித பயனுமில்லை. இவர்களுக்கு பாடம் புகட்டும் நடவடிக்கையாக அம்பாறை - கல்முனை வீதியை அரை மணித்தியாலயமாவது முடக்கி உரியவர்கள் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் - என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மீனவர்களின் படகுகளிலிருந்து ஆழ் கடலில் வைத்து களவாடப்படும் மீன்கள், சுருக்குவலைகள் தொடர்பில் நேற்று மாளிகைக்காடு அந்நூர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற மீனவர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர்,

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் எம்.பிக்கள் பலரும் உள்ள நிலை யிலும் என்னையும் இங்கு கலந்துகொண்டிருக்கும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனையும் தவராசா கலையரசனையும் அழைத்தமைக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கும் இந்த மீன்பிடியினால் பல்வேறு நஷ்டங்கள் ஏற்பட்டு என்னுடைய மீன்பிடி உபகரணங்களையும் விற்பனைசெய்ய எண்ணியுள்ளேன். கல்முனை பிரதேச செயலக விவகாரத்தில் ஒன்றுமில்லை. அதை வைத்து அரசியலை மட்டுமே செய்கிறார்கள். அந்த செயலகத்தை தரமுயர்த்துவதனால் முஸ்லிம்களுக்கு எவ்வித நஷ்டமும் இல்லை. பெயர்ப்பலகையில் மாற்றம் வருமே தவிர, தமிழர்களுக்கும் பெரிதாக ஒன்றும் கிடைக்கப் போவதுமில்லை.

இது தொடர்பில் நான் பெரிதாக பேசுவதில்லை என்கிறார்கள். இதில் பேச ஒன்றுமில்லை. இதனை வைத்துக்கொண்டு அரசியல் மட்டுமே நடக்கிறது. சந்தர்ப்பம் வரும்போது மீனவர்களின் பிரச்சினை பற்றி நாடாளுமன்றத்தில் பேசுவேன். கல்முனை பிராந்தியத்திற்கு தடுப்பூசி வழங்கவேண்டும் என்று நான் மட்டும்தான் நாடாளுமன்றத்தில் பேசினேன் - என்றார்.

# தடைசெய்யப்பட்ட என்.சி. போதைப்பொருள் கலந்த 6,400 கிலோ புகையிலைத்தூள் மீட்பு

## மூவர் கைது



(எம்.கிருஸ்ணா)

என்.சி. போதைப்பொருளில் பாக்கு மற்றும் புகையிலைத்தூள் கலந்து விற்பனைசெய்த மூவரை நோர்வூட் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பாகிஸ்தானிலிருந்து கொண்டுவரப்பட்ட தடைசெய்யப்பட்டுள்ள என்.சி. தூளில் பாக்கு மற்றும் புகையிலை கலந்து பொதி செய்யப்பட்ட 6 ஆயிரத்து 400 கிலோகிராம் தூள் மீட்கப்பட்டுள்ளது.


பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை 6 ஆயிரத்து 400 கிராம் என்.சி. கலந்த புகையிலைத்தூள் முச்சக்கரவண்டியொன்றில் கொண்டுசெல்கையில் நோர்வூட் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையின்போதே மிகவும் சூட்சமமான முறையில் சட்டவிரோதமாக தடைசெய்யப்பட்டுள்ள என்.சி. தூளில் பாக்கு மற்றும் புகையிலைத்தூள் கலப்படம் செய்து தூள் நோர்வூட் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. நோர்வூட் பிரதேசத்திலுள்ள வீடொன்றினை சோதனையிட்டபோதே மேற்படி பொதிசெய்யப்பபட்ட புகையிலைத்தூள் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய முச்சக்கர வண்டியை மீட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் நோர்வூட் பொகவந்தலாவை பட்டல்கல பகுதியைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரையும் நேற்று ஹட்டன் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்த நோர்வூட் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

# உயிரிழந்த டயகம சிறுமிக்காக கினிகத்தேனையில் ஆர்ப்பாட்டம்



(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகம தோட்டத்தைச் சேர்ந்த ஹிஷாலினியின் உயிரிழப்பு சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணை துரிதப்படுத்த கோரியும் கைதுசெய்யப்பட்ட ரிஷாட் பதியுதீனின் மனைவியின் சகோதரருக்கு தக்க தண்டனை வழங்கப்படவேண்டுமென கோரியும் கினிகத்தேனை பஸ் தரிப்பிடத்திற்க்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டமானது கினிகத்தேனை பிளக்வோட்டர் தோட்டத் தொழிலாளர்களினால் முன்னெடுக்கப்பட்டது.

ஹிஷாலினிக்கு ஏற்பட்ட இந்த நிலைமை இனி மலையகத்தில் எந்தவொரு பெண்ணுக்கும் இடம்பெறக் கூடாது. ஹிஷாலினியின் சம்பவம் தொடர்பில் இந்த நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இதற்கான தீர்வைப் பெற்றுத்தர வேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# புத்தாக்க அரங்க இயக்கத்தின் இணையவழி கதையாடல் நிகழ்வு

புத்தாக்க அரங்க இயக்கத்தினால் வாராந்தம் நடத்தப்படும் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வு எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கதையால் 3 நிகழ்வாக கொரோனா முடக்க கால தனிமையை போக்குதல் மற்றும் சிறார்களின் திறன்களை வெளிக்கொணரும் வகையில் புத்தாக்க அரங்க இயக்கத்தினரால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட இணையவழி தனிநடிப்புப் போட்டிக்கான நிலையறிவித்தல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாழ்த்துரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் பிரதி முதல்வர் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன், கதையாடல் நிகழ்வினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன், போட்டி நிலையறிவித்தலை ஆற்றுகை இணைப்பாளர் எஸ்.ஆர்.சாது, நன்றியுரையினை ஆற்றுகை இணைப்பாளர் எஸ்.ரி.திஸ்ணுகன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.




சூம் செயலி இலக்கம் 75836722465 கடவுச்சொல் ITM ஊடாக நாடகப் போட்டியாளர்களையும் நாடக ஆர்வலர்களையும் இணைந்துகொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அறிவித்துள்ளார்கள்.

# கொரிய தூதுவர் - பாதுகாப்புச் செயலாளர் சந்திப்பு; இரு நாட்டு உறவை மேலும் பலப்படுத்த இணக்கம்





கொரிய குடியரசின் இலங்கைக்கான தூதுவர் வூன்ஜின் ஜியோங் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே, பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சுக்கு முதற்றடவையாக வருகை தந்த கொரிய குடியரசின் தூதுவரை பாதுகாப்புச் செயலாளர் வரவேற்றார்.

மரியாதைபூர்வமான வரவேற்பைத் தொடர்ந்து, இலங்கை பாதுகாப்புச் செயலாளர் தென்கொரிய தூதுவருடன் இருதரப்பு முக்கியத்துவம் மற்றும் பரஸ்பர விடயங்கள் தொடர்பாக இடம்பெற்ற சிநேகபூர்வ கலந்துரையாடலின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பு விரிவாக்கம் மற்றும் வர்த்தக முதலீடு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.


இரு நாடுகளிலுமுள்ள கொவிட் -19 நிலைவரங்கள் தொடர்பாகவும் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் தென்கொரிய தூதுவர் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. நாட்டில் காணப்படும் தொற்றுநோய் நிலைமைகளின்போது இலங்கை மக்களை பாதுகாப்பதில் கொரிய குடியரசு முழு ஒத்துழைப்பு வழங்கும் என உறுதியளித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையே காணப்படும் உறவுகளை மேலும் பலப்படுத்துவதே பாதுகாப்புச் செயலாளருடனான இந்தச் சந்திப்பின் மூலம் எதிர்பார்ப்பதாக தென்கொரிய தூதவர் தெரிவித்த அதேசமயம், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மேலும் வலுப்படுத்தப்படும் என பாதுகாப்புச் செயலாளர் இதன்போது உறுதியளித்தார்.

மேலும் கொவிட்-19 பரவலைத் தடுக்கும் சுகாதார வழிகாட்டுதலுக்கமைய இடம்பெற்ற இந்த சந்திப்பினை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 13 வயது சிறுமியை கடத்திய பெண் பியகமவில் கைது

ஹனபி எம்.தாஸீம்



உறவினர் ஒருவரின் 13 வயது சிறுமியை பலாத்காரமாக கடத்திச்சென்ற திருமணமான பெண்ணொருவரை தனது தற்காலிக கணவருடன் பியகம பொலிஸார் நேற்றுமுன்தினம் பியகம பிரதேசத்தில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

குறித்த பெண் ராகம பிரதேசத்தில் தனது உறவினரொருவருடைய வீட்டுக்குச் சென்று பின் அங்கிருந்து வெளியேறும்போதே இச்சிறுமியை பலாத்காரமாக கடத்தி வந்துள்ளார்.

பின்னர், குறித்த பெண் தனது தற்காலிக கணவருடன் பியகம பிரதேசத்திலுள்ள விடுதியொன்றுக்கு வந்துகொண்டிருக்கும் போது பியகமவில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறுமியை கடத்திவந்த பெண் தம்புள்ளை பிரதேசத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தாய் என்பதோடு தற்காலிக கணவர் பொலன்னறுவை பிரதேசத்தைச் சேர்ந்தவராவர்.

கைதுசெய்யப்பட்ட பெண், சிறுமி மற்றும் தற்காலிக கணவர் மூவரையும் மேலதிக விசாரணைகளுக்காக ராகம பொலிஸ் நிலையம் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளது.

பியகம பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.ஜே.எம்.ஆர் சமரசிங்கவின் அறிவுறுத்தலுக்கிணங்க பல்வகை முறைப்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எஸ்.ரீ கருசிங்க , கான்ஸ்டபிள் சுசந்த, பெண் கான்ஸ்டபிள் ஸமீரா ஆகியோர் இச்சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 7,000 பேர் மீது வழக்குத் தாக்கல்

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றத்திற்காக 7 ஆயிரம் பேர் மீது வழக்கு தொடரப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய, முகக்கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் மேலும் 152 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 30ஆம் திகதிமுதல் இதுவரை 51,733 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அவர்களில் 45 ஆயிரத்துக்கும் அதிகமானோர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன், 7 ஆயிரம் பேர் மீது வழக்கு தொடரப்படவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

# ஓகஸ்ட் முதலாம் திகதிமுதல் மாகாணங்களுக்கிடையே போக்குவரத்து!

## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு

மாகாணங்களுக்கிடையிலான பஸ் மற்றும் ரயில் போக்குவரத்து சேவைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிமுதல் ஆரம்பமாகும் - என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டாலும், நீக்கப்படாவிட்டாலும் மாகாணங்களுக்கிடையில் குறிப்பிட்டத்தக்களவு பஸ் மற்றும் ரயில் போக்குவரத்துக்களை முன்னெடுப்பதற்கு கொவிட் -19 குழு எமக்கு அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய போக்குவரத்து கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டால் அனுமதியுடைய சகலருக்கும் மாகாணங்களுக்கிடையில் பயணிக்க முடியும். எனினும், போக்குவரத்து கட்டுப்பாடுகள் நீக்கப்படாவிட்டால் நாம் அனுமதி வழங்கும் பஸ் மற்றும் ரயில்களுக்கு மாத்திரம் பயணிக்க அனுமதி வழங்கப்படும் - என்றார்.

# கல்முனை வலயக்கல்வி அலுவலக பணியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி

(நற்பிட்டிமுனை)

கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கான கொரோனா வைரஸ் தடுப்பூசி ஏற்றல் 3 பாடசாலைகளில் இன்று 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் குறித்த திகதியில் சமுகமளித்து தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளுமாறும் தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி தெரிவித்துள்ளார்.

கல்முனை அல்பஹ்ரியா தேசிய பாடசாலை, நிந்தவூர் அல்-மதீனா மகாவித்தியாலயம், நற்பிட்டிமுனை அல்-அக்ஸா மத்திய கல்லூரிகளே இந்த மூன்று பாடசாலைகளாகும்.

இதேவேளை, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் நாளைமுதல் கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் வழங்கும் பணி ஆரம்பமாகவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணிகள் 60 வயதிற்கு மேற்பட்டோர் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின கீழுள்ள பிரதேச வைத்திய நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் உறவினர்களுக்கு வேறுதினங்களில் தடுப்பூசி யேற்றல் இடம்பெறவுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

# விசேட தேவையுடையவர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு





கொவிட் -19 தொற்று பரவல் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள கணவனை இழந்த, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கான உலருணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

கிழக்கு சமூக அபிவிருத்தி மையமாக கிழக்கு மாகாணத்தில் இயங்கிவரும் தன்னார்வ தொண்டு நிறுவனமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்ற குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தும் வகையில் மனிதநேய பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் தற்போது மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் கணவனை இழந்த, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துடன் இணைந்து மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் ஆலோசனையின்கீழ் மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சுமார் 30 இலட்சம் பெறுமதியான உலர்வுணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் பணிப்பாளர் எம்.எல்.புகாரி மொஹமட் தலைமையில் மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் கலந்துகொன்டு உலருணவுப் பொதிகளை வழங்கினார். இந்நிகழ்வில் கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கியிருந்தமை குறிப்பித்தக்கது.

# போதைப்பொருளுடன் நான்கு பேர் கைது



(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

ஐஸ் மற்றும் கேரளா கஞ்சா போதைப்பொருடன் நான்கு சந்தேகநபர்களை நுவரெலியா குற்றவியல் தடுப்புப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்

நேற்றுமுன்தினம் மாலை லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மெரேயா பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய லிந்துலை பொலிஸ் பிரிவு மெரேயா பகுதியில் வீடொன்றில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 01 கிராம் 30 மில்லிகிராம் ஐஸ் 12 பொதிகளும் 442 கிராம் 170 மில்லிகிராம் கேரளா கஞ்சா 48 பக்கட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக நுவரெலியா குற்றவியல் பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் விற்பனையுடன் தொடர்புடையவர்கள் என கைதுசெய்யப்பட்ட 25, 30 வயதுடைய லிந்துலை, கொட்டகலை, தலவாக்கலை பகுதிகளைச் சேர்ந்த நான்கு சந்தேகநபர்களும் நேற்று நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஜூலை படுகொலை நாளில் கல்முனையில் ஆர்ப்பாட்டம்

பாறுக் ஷிஹான்

ஜூலை படுகொலையின் 38ஆவது ஆண்டு நாளான நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் ஏற்பாட்டில் கல்முனை நகரில் ஆர்ப்பாட்ட மொன்று இடம்பெற்றது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துஷானந் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், பொது மக்கள் பதாகைகளை தாங்கியவாறு பங்குபற்றியிருந்தனர். தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகள், படுகொலைகளுக்கு



சர்வதேசம் நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்று நாடாளு மன்ற உறுப்பினர் கஜேந்திரன் கருத்து தெரிவித்தார்.

# ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதி கோரி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம்



(வவுனியா நிருபர்)

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியதீன் வீட்டில் மரணித்த சிறுமி ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதி கோரி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்புவதற்காக வவுனியாவில் கையெழுத்துப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, இலுபையடிச் சந்தியில் சுயாதீன இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை முதல் மதியம்வரை இந்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணிப்பெண்ணாக பணிபுரிந்து மரணமடைந்த ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதியான விசாரணை இடம்பெற்று, குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும் குறித்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

குறித்த கையெழுத்துப் போராட்டத்தின் பின் அதன் கடிதங்கள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கு அனுப்பவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு நீதி கோரி கையெழுத்திட்டனர்.

# கறுப்பு ஜூலை தினத்தையொட்டி 15 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரில் கவனயீர்ப்புப் போராட்டம்

## ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதியான விசாரணைக்கும் கோரிக்கை







(மன்னார் நகர் நிருபர்)

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலை தினத்தையொட்டி 15 அம்சக் கோரிக்கையை முன்வைத்து மௌன கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மதத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த மௌன கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வாயை கறுப்புத் துணியால் கட்டியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் 15 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இடம்பெற்றது.

எரிபொருள் விலையை அதிகரிக்காதே, விவசாயிகள், கடற்றொழிலாளர்களுக்கு மானியம் வழங்கு, ஏழைகளை வஞ்சிக்காதே, அத்தியாவசிய பொருட்களுக்கு விலை அதிகரிக்காதே, வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு விரைந்து முடிவு சொல், ஜனநாயகப் போராட்டங்களை நசுக்காதே, கொரோனாவை காட்டி பொய் வழக்கு போடாதே, கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலத்தை மீளப்பெறு, ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதியான விசாரணை வேண்டும், விவசாயிகளின் உரம் மருந்து பிரச்சினைக்குத் தீர்வு வழங்கு, சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளை அகற்று, எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை சிதைக்காதே, சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு, அப்பாவி தமிழ் இளைஞர்களை கைதுசெய்யாதே, குடும்ப ஆட்சியில் நாட்டை வெளிநாடுகளுக்கு ஏலம் போடாதே, வடக்கில் திட்டமிட்ட நில அபகரிப்பை நிறுத்து, பௌத்த மயமாக்கலை திணிக்காதே, ஜனநாயகத்திற்கு மதிப்பளி, ஊடக அடக்குமுறையை நிறுத்து, அரைகுறையாக உள்ள வீட்டுத்திட்டங்களை நிறைவுசெய் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டம் இடம்பெற்றது.

மேலும், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.



**பாலமுனை திராய்க்கேணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற வருடாந்த உற்சவ இறுதிநாள் நிகழ்வின்போது இடம்பெற்ற தீ மிதிப்பு நிகழ்வை காணலாம்.**

**(பாலமுனை நிருபர்)**

# 50,000 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு ஆரம்பம்!

## அரசாங்கம் அறிவிப்பு

**நாட்டின் 19 மாவட்டங்களில் நெல் கொள்வனவு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள் ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

**நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு உட்பட்ட 325 களஞ்சியங்களில் நெற்கொள்வனவு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சபையின் உப தலைவர் துமிந்த பிரியதர்ஷன தெரிவித்துள்ளார்.**

**தேவைப்படும் பட்சத்தில் தனியார் துறையின் ஆதரவையும் பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்தார்.**

**எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் 50 ஆயிரம் மெட்ரிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக 310 கோடி ரூபா கிடைத்துள்ளது.**

**வரலாற்றில் முதற்றதடவையாக சம்பந்தப்பட்ட அனைத்து தரப்புகளையும் ஓர் இடத்திற்கு கொண்டுவர விவசாய மற்றும் வர்த்தக அமைச்சுகளால் முடிந்திருப்பதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் உப தலைவர் கூறினார்.**

**சந்தையில் அனைத்து அரிசி வகைகளையும் 100 ரூபாவுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யமுடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

# வவுனியா சந்தை உள்வட்ட வீதி முடக்கப்பட்டு பிசிஆர் பரிசோதனை முன்னெடுப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா சந்தை உள்வட்ட வீதி இராணுவத் தினராலும், பொலிஸாராலும் முடக்கப்பட்டு சுகாதாரப் பிரிவினரால் நேற்று பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா சந்தை உள்வட்ட வீதியிலுள்ள சிகையலங்கரிப்பு நிலையத்தைச் சேர்ந்த மூவர் உட்பட 10 பேர் கொவிட் தொற்றாளர்களாக இனங் காணப்பட்டிருந்தனர்.



இதனையடுத்து, குறித்த பகுதியில் கொவிட் பரவல் அடைவதைத் தடுக்கும் வகையில் சந்தை உள்வட்ட வீதி இராணுவத் தினராலும், பொலிஸாராலும் எவரும் உட்செல்ல மற்றும் மற்றும் வெளிச்செல்ல முடியாதவாறு முடக்கப் பட்டுள்ளதுடன், குறித்த பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் பணியாற்றுவோர் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு வருகை தந்தோர் ஆகியோரிடம் சுகாதாரப் பிரிவினர் பிசிஆர் பரிசோதனையை முன்னெடுத்தனர்.

பிசிஆர் பரிசோதனை முடிவுகளையடுத்து அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப் படும் என சுகாதாரப் பிரிவினர் இதன்போது தெரிவித்தனர்.

# சாய்ந்தமருதில் பொலிஸ் நிலையம் திறந்துவைப்பு






நூருல் {ஹதா உமர்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சௌபாக்கியத்தின் நோக்கு திட்டத்தின்கீழ் காரைதீவு பிரதேச செயலகப் பிரிவுக்கான பொலிஸ் நிலையம் கடற்கரை வீதியில் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவுக்கான பொலிஸ் நிலையம் நேற்று கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கமல் சில்வாவினால் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட மற்றும் பிராந்திய பொலிஸ் உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பிரதம பொலிஸ் பரிசோதகர்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள், ஆலய பரிபாலன சபையினர், மதகுருமார்கள், கிராமசேவகர்கள், ஊர்ப் பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டதுடன் பௌத்த, இஸ்லாமிய, இந்து மதகுருமார்களின் ஆசியுடன் இந்த பொலிஸ் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வுகளின் நினைவாக அதிதிகளினால் மரக்கன்றுகள் நடப்பட்டதுடன் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கமல் சில்வா குறிப்பேட்டிலும் கையெழுத்திட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வேலைவாய்ப்புத் திட்டத்தில் பயிற்சிகளை நிறைவுசெய்தவர்களுக்கு நிரந்தர நியமனம்





(கந்தளாய்)

குறைந்த வருமானம் பெறும் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தில் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு கந்தளாய் எம்.கே.ஏ.டி.எஸ்.குணவர்த்தன மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அலுவலகங்களில் பயிற்சியில் ஈடுபட்ட 45 பேருக்கு இவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

இவர்களுக்கான நிரந்தர நியமனங்களை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான கபில அத்துக்கோரல, கந்தளாய் வலயக்கல்விப் பணிப்பாளர், கந்தளாய் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டு நியமனக் கடிதங்களை வழங்கினர்.

# உலக செய்திகள்



# ‘டெல்ட்டா’வை விட வீரியம் மிக்க மற்றொரு வைரஸ் உருவாகலாம்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

‘‘டெல்ட்டாவை விட வீரியம் நிறைந்த மற்றொரு வைரஸ் தோன்றலாம். அந்த வைரஸ் அதிகம் ஆபத்து ஏற்படுத்தும் வகையில் இருக்கும்’’ - என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

அத்தோடு டெல்ட்டா வகை கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தவுள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனாவில் வூஹான் நகரில் தோன்றிய கொரோனா வைரஸ், தொடர்ந்து உருமாற்றமடைந்து வருகிறது. தற்போதைய உருமாற்றமடைந்த ‘டெல்ட்டா’ மற்றும் ‘டெல்ட்டா ப்ளஸ்’ போன்ற வைரஸ்கள் உலகம் முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இதனை கட்டுப்படுத்தும் பணிகளில் உலக நாடுகள் அனைத்தும் முழுமூச்சுடன் ஈடுபட்டிருக்கும் இந்நிலையில், உலகளவில் கடந்த 4 வாரங்களில் கொரோனா பாதித்தவர்களில் 75% பேருக்கு ‘டெல்ட்டா’ வகை கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் முதன்முறையாக உறுதிசெய்யப்பட்ட டெல்ட்டா வகை கொரோனா தற்போது 124 நாடுகளில் தற்போது பரவிவருகிறது. முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது, மேலும் 14 நாடுகளுக்கு இந்த வகை கொரோனா பரவியுள்ளது.

இந்நிலையில், அல்பா, பீட்டா, கமா வகை கொரோனாவை காட்டிலும் டெல்ட்டா வகை மிக வேகமாக பரவும் என்றும் அனைத்து நாடுகளிலும் இன்னும் சில மாதங்களில் அதிக ஆதிக்கம் செலுத்தப் போவதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் டெல்டாவை விட வீரியம் நிறைந்த மற்றொரு வைரஸ் தோன்றலாம் என்றும் அந்த வைரஸ் அதிகம் ஆபத்து ஏற்படுத்தும் வகையில் இருக்கும் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

### பெகாசஸ் விவகாரம்:

## அனில் அம்பானி - தலாய் லாமாவின் தொலைபேசி உரையாடல்களும் ஒட்டுக்கேட்பு



பெகாசஸ் உளவு மென்பொருளை பயன்படுத்தி உளவு பார்க்கப்பட்டவர்களில் பட்டியலில் சிபிஐ முன்னாள் இயக்குநர் அலோக் வர்மா, அனில் அம்பானி, தலாய் லாமா உள்ளிட்டோரும் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேலைச் சேர்ந்த தனியார் நிறுவனத்தின் பெகாசஸ் உளவு மென்பொருள் விவகாரம் பூதாகரமாகியுள்ளது. உலகத் தலைவர்கள் உட்பட 50 ஆயிரத்துக்கும் அதன் மூலம் உளவு பார்க்கப்பட்டதாக ஆய்வறிக்கை கூறுகிறது. இந்தியாவில் பத்திரிகையாளர்கள் உட்பட 300 பேரின் பெயர்கள் அப்பட்டியலிலுள்ளதாக கூறப்படுகிறது. ரபேல் ஊழல் குற்றச்சாட்டு வெடித்த 2018ஆம் ஆண்டு தொழிலதிபர் அனில் அம்பானியின் தொலைபேசி உரையாடல் ஒட்டுகேட்கப்பட்டதாக தற்போது முறைப்பாடு எழுந்துள்ளது.

அதே ஆண்டில் சிபிஐ இயக்குநராக இருந்த அலோக் வர்மா - சிறப்பு இயக்குநர் ராகேஷ் அஸ்தானா இடையே மோதல் போக்கு நிலவியபோது அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரின் தொலைபேசிகளும் ஒட்டுக்கேட்கப்பட்டதாக கூறப்படுகிறது.

அந்தப் பட்டியலில் திபெத் மதகுரு தலாய் லாமாவின் ஆதரவாளர்கள் மற்றும் ஆலோசகர்களின் தொலைபேசி எண்களும் இடம்பெற்றிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

ஒட்டுக்கேட்பு விவகாரத்தில் ஒன்றிய அரசை கடுமையாக சாடிவரும் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பெனர்ஜி, எதிர்வரும் 26ஆம் திகதி பிரதமர் மோடியை சந்திக்கவுள்ளார்.

## சீனாவில் வரலாறு காணாத வெள்ளம் 3 நாட்களாக உணவின்றி தவித்த மக்கள்



அதீத மழை வெள்ளத்தால் சீர்குலைந்து போயுள்ள மத்திய சீனாவின் ஹெனான் மாகாணத்தில், உணவு, நீரின்றி மூன்று நாட்களாக பரிதவித்த மக்கள் மீட்கப்பட்டு வருகின்றனர்.

சுமார் ஒரு கோடியே 20 இலட்சம் பேர் வாழும் மாகாண தலைநகர் Zhengzhou, மற்ற பகுதிகளிலிருந்து முழுவதுமாக துண்டிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாட்களாக நீர், உணவு, மின்சாரம் இல்லாமல் குழந்தைகள், முதியவர்கள் உட்பட பல இலட்சம் பேர் தவித்துவரும் நிலையில், மீட்புப் பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன. மேலும் மழை வெள்ளத்தில் சிக்கி சீனாவில் இதுவரை 33 பேர் உயிரிழந்துள்ளதுடன் 8 பேர் காணாமல் போயுள்ளதாக அந்நாட்டு தேசிய பேரிடர் மீட்புப் படை தெரிவித்துள்ளது.

**இந்தியா - சீனாவுக்கு ஆபத்து**

பிரான்ஸின் நோட்ரே டேம் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானிகள் வெளியிட்ட ஆய்வறிக்கையில்,

பருவநிலை மாற்றம், காற்று மாசுவால் உலகில் அதிகம் பாதிக்கப்படும் 5 நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் சீனாவும் இடம்பெற்றுள்ளன. கடந்த 20 ஆண்டுகளில் இந்நாடுகளில் பெய்த தொடர் கனமழை, வெள்ளம், அடிக்கடி வீசிய புயல், சூறாவளி, அதிக வெப்பம் ஆகியவை இந்நாடுகள் சந்திக்கவுள்ள காற்று மாசு, பருவநிலை மாற்றத்தை வெளிப்படுத்துகின்றன.

உலக நாடுகளில் காற்று மாசினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையில் 23.5 சதவீதத்துடன் இந்தியா 5ஆவது இடத்திலும், 17.9 சதவீதத்துடன் சீனா 13ஆவது இடத்திலும் உள்ளன. இதனால், காற்று மாசு, பருவநிலை மாற்றத்தினால் மிகவும் பாதிக்கப்படும் ஆபத்து நிறைந்த நாடுகளாக இரு நாடுகளும் உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விரைவில் ‘எனிமி’



‘அவன் இவன்’ படத்திற்குப் பிறகு ஆர்யா - விஷால் இணைந்து நடித்துள்ள ‘எனிமி’ படத்தின் முக்கிய அப்டேட் வெளியாகியுள்ளது.

பாலா இயக்கத்தில் ஆர்யா, விஷால் நடிப்பில் வெளியான திரைப்படம் ‘அவன் இவன்’. இப்படத்தில் இருவரும் நெருங்கிய நண்பர்களாக நடித்திருந்தார்கள். தற்போது நீண்ட இடைவெளிக்கு பிறகு இருவரும் இணைந்து ‘எனிமி’ என்ற படத்தில் நடித்து வருகிறார்கள்.

இப்படத்தில் விஷாலுக்கு ஜோடியாக மிருணாளினியும், ஆர்யாவுக்கு ஜோடியாக மம்தா மோகன்தாஸும் நடிக்கின்றனர்.

படப்பிடிப்பு சில தினங்களுக்கு முன்பு நிறைவடைந்துள்ள நிலையில், எனிமி படத்தின் டீசர் இன்று ( ஜூலை 24) மாலை 6 மணிக்கு வெளியிடவிருப்பதாக படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

## உலகில் பயணத்திற்காக அதிகளவில் ஏற்கப்பட்ட தடுப்பூசி எஸ்ட்ரா செனிகா




‘‘உலகளவில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கொரோனா தடுப்பூசி எஸ்ட்ரா செனிகாவின் தடுப்பூசி’’ என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நாடுகளின் எல்லை கடந்த பயணங்களுக்கு இரண்டு தடுப்பூசிகள் ஏற்றிக்கொள்ளும் பயணிகளுக்கு சலுகைகள் வழங்கப்படுகின்றன. இதில் எஸ்ட்ரா செனிகாவே முன்னிலை வகிக்கிறது. கடந்த 2020ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை 74 சதவீத சரிவைக் கண்டு. உலகம் முழுவதும் தடுப்பூசி இயக்கம் வேகம் பெற்றுள்ள நிலையில் மீண்டும் பயணங்களுக்காக பலர் தயாராகி வருகின்றர்.

ஆனால், எல்லாவகையான தடுப்பூசிகளும் கடல்கடந்த நாடுகளுக்குச் செல்ல ஏற்கப்படுவதில்லை. ஐரோப்பிய ஒன்றியம் இந்தியாவில் உற்பத்தியாகும் கொவிஷீல்ட்டை ஏற்க மறுத்தது. வெளிநாடுகளிலிருந்து வருவோரை தனிமைப்படுத்தப் போவதாக இந்தியா எச்சரித்ததையடுத்து 16 நாடுகள் கொவிஷீல்ட்டுக்கு ஒப்புதலளித்துள்ளன.

## கின்னஸில் டோர்ச்லைட்



கனடாவைச் சேர்ந்த James Hobson என்பவர் உலகின் அதிபிரகாசமான டோர்ச் லைட் ஒன்றை உருவாக்கி கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

Hacksmith என்ற நிறுவனத்தைச் சேர்ந்த James Hobson, Nitebrite 300 என்ற பெயரில் 300 எல்.இ.டி. பல்புகளைக்கொண்டு அதிநவீன மற்றும் அதிபிரகாசமிக்க டோர்ச் லைட்டை உருவாக்கியுள்ளார்.

300 எல்.இ.டி. பல்புகளைகொண்டு எரியவிடப்பட்ட டோர்ச் லைட் 5 இலட்சத்து ஆயிரத்து 31 லியூமன்ஸ் அளவில் பிரகாசித்து அதிக வெளிச்சத்தை வெளிப்படுத்தியது. தனித்தனி போர்ட்களில் 6 எல்.இ.டி. பல்புகளை பொருத்தி, மொத்தம் 50 போர்ட்களில் 300 எல்.இ.டி. பல்புகளை பொருத்தி ஒரே பேட்டரி இணைப்பின் மூலம் ராட்சத டார்ச் லைட்டை உருவாக்கியுள்ளனர்.

## முகக்கவசங்களால் உருபெற்ற திருமண ஆடை



**பிரித்தானியாவில் 1,500 முகக்கவசங்களை பயன்படுத்தி இளம்பெண் அணியும் திருமண ஆடையொன்று அற்புதமாக உருவாக்கப்பட்டுள்ளது.**

**பிரித்தானியாவில் கொரோனா கட்டுப்பாடுகள் சமீபத்தில் முற்றிலுமாக தளர்த்தப்பட்டன. இதனை அந்நாட்டு மக்கள் உற்சாகத்துடன் கொண்டாடி வருகின்றனர்.**

**இந்நிலையில், அங்குள்ள ஆடை வடிவமைப்பாளர் Tom Silverwood என்பவர் மணப்பெண் அணிவதற்காக 1,500 முகக் கவசங்களை பயன்படுத்தி திருமண ஆடையை தயாரித்து கொடுத்துள்ளார்.**

**வெள்ளை நிறத்திலாலான அந்த ஆடையை Jemima Hambro என்ற மொடல் அழகி அணிந்துள்ள புகைப்படம் அதிகம்பேரால் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகிறது.**



## அமெரிக்காவில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா: ஒரே நாளில் 61,651 பேர் பாதிப்பு; 365 பேர் பலி



இந்தியாவில் கொரோனா பரவல் 40 ஆயிரத்திற்கும் கீழ் குறைந்துள்ள நிலையில் அமெரிக்கா, பிரேஸில், இந்தோனேஷியாவில் கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது.

அமெரிக்காவில் நேற்று ஒரேநாளில் 61,651 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் 365 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. அமெரிக்காவில் இதுவரை 3,52,13,594 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 6,26,172 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்காவில் தொற்று மீண்டும் அதிகரிக்க டெல்ட்டா வகை வைரஸே காரணம் என்று அந்த நாட்டின் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நாட்டின் சுகாதாரத்துறை மேலும் தெரிவித்துள்ளது.

டெல்ட்டா வகை வைரஸ் வேகமாக பரவக்கூடியது. முந்தைய வகை வைரஸை விட பரவும் தன்மை ஆயிரம் மடங்கு அதிகம் என்று கூறலாம்.

நோய் எதிர்ப்புச்சக்தி அதிகமாக இருக்கும் மனிதர்களை கூட டெல்ட்டா வைரஸ் அதிகம் பாதிக்கும் என்று ஆய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குழந்தைகளிடமும் பரவத் தொடங்கியுள்ளது என்று குறிப்பிட்டார். அமெரிக்காவுக்கு அடுத்ததாக தினசரி தொற்று பிரேஸில் மற்றும் இந்தோனேஷியாவில் அதிகரித்துள்ளது. இரு நாடுகளிலும் 24 மணிநேரத்தில் தலா 50,000 பேருக்கு புதியதாக கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 3,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரித்தானியாவிலும் நேற்று ஒரேநாளில் 40,000 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக அந்த நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. ஸ்பெயின், ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் கொரோனா பரவலின் 2ஆம் அலை தீவிரமடைந்துள்ளது.

அதிகம் தொற்றுள்ள நாடுகளின் அட்டவணையில் இந்தியா 2ஆவது இடத்தில் இருந்தாலும் தினசரி தொற்று 40,000இற்கும் கீழாக குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தொற்று அதிகரித்ததற்கு அதிவேகமாக பரவும் உருமாற்றமடைந்த டெல்ட்டா வகை வைரஸே காரணம் என்பதால் பொதுவெளியில் பொதுமக்கள் தவறாமல் கொரோனா கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டும் என்றும் தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அமெரிக்கா, பிரேஸில், பிரித்தானியா, இந்தோனேசியா ஆகிய நாடுகள் அறிவுறுத்தியிருக்கின்றன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7